நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆடி 24 ஹிஜ்ரி 1427 றஜபு 14 (09.08.2006) புதன்கிழமை இதழ் 311



யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.


# பம்பலப்பிட்டி குண்டுவெடிப்பில்

# ஈ.பி.டி.பி சிவதாசன் படுகாயம்

## பயணித்த வாகனம் எரிந்து கருகியது



கொழும்பு

கொழும்பு - பம்பலப்பிட்டி டிக்மன் வீதியில் நேற்று மாலை வாகனம் ஒன்றில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பில் இருவர் கொல்லப்பட்டதுடன் - ஈ.பி.டி.பி. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.50 மணியளவில் டிக்மன் வீதியிலுள்ள மிலாகிரிய சென். போல்ஸ் மகளிர் பாடசாலைக்கு அருகில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நெருங்கிய உறவினரும் ஈ.பி.டி.பியின் இரண்டாம் நிலைத் தலைவராகக் கருதப்படுபவரும், பனை அபிவிருத்திச் சபை தலைவராக பதவி வகித்து வருபவருமான (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் தாக்குதலில் 2 அதிரடிப்படையினர் பலி

அம்பாறை

அம்பாறை - பொத்துவில் பாணம பிரதேசத்தில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் விசேட அதிரடிப்படையினர் இருவர் கொல்லப்பட்டனர்.

பன்னகல என்ற இடத்தில் அதிரடிப்படை முகாமுக்கு குடிநீர் எடுத்துச் சென்ற பவுசர் மீதே கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 11.20 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்கு தலில் பொத்துவில் - (12 ஆம் பக்கம் பார்க்க)

## மொரவெவ தாக்குதலில் விமானப்படை சிப்பாய் பலி!

திருகோணமலை

திருகோணமலை - மொரவெவ பகுதியில் நேற்றுக் காலை ரோந்து சென்ற விமானப்படையினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் விமானப்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை- அநுராதபுரம் வீதியில் மொரவெவவுக்கு அருகே வெல் வெரி என்ற இடத்தில் நேற்றுக்காலை 7.15 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. கிளைமோர் தாக்குதலை அடுத்து விமானப்படையினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவலர் சுட்டுக்கொலை!

அம்பாறை

அம்பாறை–அக்கரைப்பற்றில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திலிருந்து நூறு மீற்றர் தொலைவில்– பொத்துவிலுக்குச் செல்லும் வீதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 8.30 மணியள்வில் இரு பொலிஸாரும், இரு ஊர்காவற்படையினருடன் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதிலேயே மேற்படி ஊர் கா வற் படைச் சிப்பாய் கொல்லப்பட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமான அடிப்படையில் புலிகளால் மாவிலாறு திறப்பு

திருகோணமலை

திருகோணமலை - மாவிலாறு அணை மனிதாபிமான அடிப்படை யில் விடுதலைப் புலிகளால் திறந்து விடப்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி மூடப்பட்ட மாவிலாறு அணையை 24 மணி நேரத்துக்குள் திறந்து விடப்போவதாக அரசு - படை நடவடிக்கையில் இறங்கியது.

எனினும், இரண்டு வாரங்களாக நிகழ்ந்த படை நடவடிக்கையின் மூலம் மாவிலாறைத் திறந்துவிட முடியாமல் படையினர் தவிக்கும் நிலையிலேயே நேற்று புலிகள் இதைத் திறந்துவிட்டனர்.

நோர்வேயின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து நல்லெண்ண அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அணையைத் திறந்து விட விடுதலைப் புலிகளும், கண்காணிப்புக் குழுவினரும் முயன்றபோது - படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலால் இந்த முயற்சியை விடுதலைப் புலிகள் நிறுத்தியிருந்தனர்.

எனினும், படை நடவடிக்கை மூலம் திறந்துவிடுவோம் என மார்தட்டி மீண்டும் புறப்பட்ட படையினரின் (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அழுத்தம் காரணமாக அணையைத் திறந்து விடவில்லை

### திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்

திருகோணமலை

மாவிலாறு அணையைத்திறந்து விட்டது மனிதாபிமான நோக்கிலேயன்றி – இராணுவ ரீதியான அழுத்தத்தின் காரணமாக அல்ல என்று திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

மாவிலாறு பிரச்சினை பல பிரச்சினைகளாக உருவாகியிருந்தன. இடையில் மக்களின் கோரிக்கைகள் பல முன் வைக்கப்பட்டன. அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய சாத்தியக் கூறுகளை தாங்கள் எடுத்துக்கொள்வதாக நோர்வே பிரதிநிதிகள் கிளிநொச்சியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தெரியப்படுத்தியிருந்தனர்.

மூன்று வாரங்களுக்குள் அதை நடைமுறைப்படுத்துவதாகக் கூறினார்கள். இந்த அடிப்படையில் நோர்வே பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்காகவும், மனிதாபிமான அடிப்படையிலும், தலைவரின் பணிப்புக்காகவுமாக நாங்கள் இந்த அணைக்கட்டைத் திறப்பதற்கான முயற்சிகளை முன்னர் மேற்கொண்டோம்.

அதனடிப்படையில் நாங்களும், (12ஆம் பக்கம் பார்க்க)

## அணையை திறந்த பின்னரும் அகோர ஷெல் தாக்குதல்கள்!

திருகோணமலை

மாவிலாறு அணையை விடுதலைப் புலிகள் திறந்துவிட்ட பின்னரும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்றிரவும் பல்குழல் பிரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நேற்றிரவு 10.45 மணியளவில் திருகோணமலை கடற்படைத்தளம், மாங்கிபிறிஜ் கடற்படைத் தளம் ஆகிய முகாம்களில் இருந்து ஏவப்பட்ட பல்குழல் பீரங்கிகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான மூதூர் கிழக்கு, சம்பூர்; சேனையூர், ஈச்சிலம்பற்று ஆகிய இடங்களிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்தன.

இதன்போது ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் உடனடியாகக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அணையைத் திறந்து விட்டது படையினரே என்கிறது அரசு!

கொழும்பு

துல்லியமான விமானத்தாக்குதலின் பின்னர் படையினர் மாவிலாறைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து- அணையைத் திறந்து விட்டதாக அரசாங்க பாதுகாப்பு பேச்சாளரும், அமைச்சருமான கெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அணைக்கட்டை தாங்கள் திறந்ததாக விடுதலைப் புலிகள் கூறுவதையிட்டு நாங்கள் ஆச்சரியப்பட வில்லை. விடுதலைப் புலிகள் தாங்கள் செய்ததை செய்யவில்லை என்றும், செய்யாததை செய்தது என்றும் கூறிய அனுபவங்கள் எங்களுக்கு இருக்கிறது.

ஒரு திட்டத்துடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் வீச்சாவடைந்த பதினொரு போராளிகளின் விபரம்

கிளிநொச்சி

திருகோணமலையில் படையினருக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் விபரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

4.08.2006 அன்று திருமலை மூதூர் பகுதியில் நடந்த தாக்குதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

கப்டன் விழியரசி ( முருகையா இராஜேஸ்வரி) சொந்த முகவரி 3 ஆம் வாய்க்கால் கிளிநொச்சி, தற்காலிக முகவரி 4 ஆம் துண்டு கோணாவில் அக்கராயன்.

03.08.2006 அன்று மூதூர் இறங்குதுறை கடற்பரப்பில் நடந்த தாக்குதலின்போது மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.


கடற்புலி 2 ஆம் லெப். குறிஞ்சிக்கனி (செல்வராசா செல்வரஞ்சன்) சொந்த முகவரி யாழ்.மாவட்டம்.

கடற்புலி வீரவேங்கை புரட்சிவீரன் (இராசேந்திரன் பிறேந்திரன் சொந்தமுகவரி யாழ். மாவட்டம்).

கடற்புலி வீரவேங்கை சங்கர் (சிவாஜி கணேசன் அலைக்ஸ்மேலட்) சொந்த முகவரி யாழ்.மாவட்டம்.

02.08.2006 அன்று மூதூர்ப் பகுதியில் நடந்த வலிந்த தாக்குதலின் போது 7 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரவேங்கை எழில்விழி (கணேசன் கோகிலவதனி) சொந்த முகவரி திருமலை மாவட்டம் தற்போதைய முகவரி: சதன் முறிப்பு முள்ளியவளை முல்லைத்தீவு, வீரவேங்கை அருளந்தி (அருளானந்தம் சுதர்சினி) சொந்த முகவரி திருமலை மாவட்டம், வீரவேங்கை பார்விழி (ஜெயமூர்த்தி நிசாந்தினி) சொந்த முகவரி திருமலை மாவட்டம், 2 ஆம் லெப். ஈளமொழி (டோமினிக் கோமினா) சொந்த முகவரி 8 ஆம் வட்டாரம், மந்துவில் புதுக்குடியிருப்பு, கப்டன் தமிழ்விழி (திருநாவுக்கரசு மீனா அல்லது ரயித்திரா) சொந்த முகவரி சிவபுரம் கிராஞ்சி மன்னார், மேஜர் வாணி ( கந்தராசா - மஞ்சுளா) சொந்த முகவரி சிவபுரம் கிராஞ்சி மன்னார், மேஜர் வாணி (கந்தராசா - மஞ்சுளா) சொந்த முகவரி யாழ்.மாவட்டம், மேஜர் இசைவிழி அல்லது தேவகி (தெய் வேந்திரம் குணேஸ்வரி) சொந்த முகவரி யாழ்.மாவட்டம் தற்போதைய முகவரி 150 குடியேற்றத்திட்டம் மூக்கொம்பன் பூநகரி மன்னார் ஆகியோரே வீரச்சாவடைந்தனர் என புலிகள் அறிவித்துள்ளனர்.



நல்லூர் கந்தசுவாமி கோயிலின் பத்தாம் திருவிழாவான நேற்று முருகப்பெருமான் அழகிய மஞ்சத்தில் திருவீதியுலா வரும் காட்சி.

# மேலும் இரண்டு தொண்டர்களின் சடலங்கள் மூதூரில் கண்டெடுப்பு!

திருகோணமலை

மூதூர்-பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் அலுவலகத்துக்குள் வைத்துப்படுகொலை செய்யப்பட்ட பணியாளர்களின் எண் ணிக்கை 17 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், இந்தச்சம்பவம் தொடர்பாக புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

மூதூர் கிழக்குக்கு விடுதலைப் புலிகள் திரும்பிய பின்னர், கடந்த சனிக்கிழமை காலை மூதூர் நகரை கைப்பற்றிய படையினர்- பட்டினிக்கெதிரான நிலையத்தின் செயலகத்துக்குள் புகுந்து அங்கிருந்த பணியாளர்களை வரிசையில் நிற்கவைத்து துப்பாக்கிமுனையில் விசாரணைக்குட்படுத்திய பின்னர் நிலத்தில் படுக்க வைத்து நெற்றியில் சுட்டுப்படுகொலை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்றபோது தொண்டர் நிறுவனத்தின் 17 பணியாளர்கள் செயலகத்தில் நின்றபோதும் இவர்களில் இருவர் செயலகத்தை விட்டு தப்பியோட முற்பட்டதாகக் கூறப்படுகிறது.

எனினும், இவர்கள் இருவரையும் விரட்டிச் சென்று கோரமாக சுட்டுப்படுகொலை செய்த பின்னர் சடலங்களை செயலகத்தை அண்டியுள்ள காணியொன்றில் புதைத்தனர்.

ஏனைய 15 பணியாளர்களின் சடலங்களும் மிகவும் உருக்குலைந்த நிலையில் மரணவிசாரணைகளுக்காக திருமலை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும்- அவற்றை உறவினர்களோ அல்லது செய்தியாளர்களோ பார்வையிடுவதற்கு பொலிஸார் அனுமதிக்கவில்லை.

நேற்று நண்பகல் 1.30 மணியளவில் 9 பணியாளர்களின் சடலங்களையும் பிரேதபெட்டிகளில் பூட்டி உறவினர்களிடம் கையளித்த பொலிஸார் இவற்றைத் திறந்து பார்க்கக்கூடாது என்றும், இரண்டு மணித்தியாலத்துக்குள் சடலங்களை அடக்கம் செய்யுமாறும் கடுமையான உத்தரவு பிறப்பித்தனர்.

இந்த வெறியாட்டத்தில் பலியான பணியாளர்களில் ஒருவர் முஸ்லிம் என்றும், ஏனைய 16 பேரும் தமிழர்கள் என்றும் தெரியவருகிறது.

கவிதா, கோவர்த்தனி, றொமிலா, கோகுலவர்த்தனி, கேதீஸ்வரன், கோடீஸ்வரன், சிறீதரன், ஆனந்தராஜ், ஜெயசீலன், நர்மதன், கணேஸ், கோணேஸ், முரளீதரன், பிரதீபன், அருள்ராஜ், ரிஷிகேசன், அப்துல் லற்றிவ் ஆகிய 17 பணியாளர்களுமே கோரக்கொலை வெறியாட்டத்தில் பலியாகினர். இவர்களில் 4 பெண்களும் அடங்குவர்.

இவர்களில், கோடீஸ்வரன் என்பவர் கடந்த ஜனவரி மாதம் 2 ஆம் திகதி திருகோணமலையில் படையினரால் கொலை செய்யப்பட்ட ஹேமச்சந்திரன் என்ற மாணவனின் சகோதரன் எனத் தெரியவருகிறது.

இதேவேளை, இந்தக்கொலை சம்பந்தமான விடயங்களை அறிந்து கொள்வதற்காக பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் தலைமையகமான பிரான்ஸின் மனித வளப்பணிப்பாளர் இலங்கைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடற்கரைச்சேனை, சேனையூர், சம்பூர், இலக்கந்தை, சூடைக்குடா, பாட்டாளிபுரம், கூனித்தீவு ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்த மக்களுக்கு இந்த நிறுவனம் சேவையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# 39 ஆயிரம் பொதுமக்கள் மூதூரில் இடம்பெயர்வு!

திருகோணமலை

திருகோணமலை - மூதூரில் இருந்து சுமார் 39 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்ததாக இலங்கை முஸ்லிம் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

10 ஆயிரத்து 563 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 744 பேர் மூதூரில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் தற்காலிக முகாம்களான - கந்தளாய், முள்ளிப்பொத்தானை, கிண்ணியா, திருகோணமலை பிரதேசங்களில் தங்கியுள்ளனர்.

இவர்களில் 18 ஆயிரத்து 747 ஆண்களும், 18 ஆயிரத்து 466 பெண்களும் அடங்குகின்றனர். அத்துடன், 4 ஆயிரத்து 454 சிறுவர்களும் இடம்பெற்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 27 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான மக்கள் கந்தளாய் பிரதேசத்திலேயே தங்கியுள்ளனர்.

7 ஆயிரத்து 641 குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்து 442 பேர் கந்தளாய் பிரதேசத்தில் தங்கியிருப்பதாக அந்த நிலையம் மேலும் தெரிவித்தது.

# நீண்டகாலமாக திருத்தப்படாத கோண்டாவில் சோளம்தோட்ட வீதி

கோண்டாவில்

கோண்டாவில் வடக்கு - சோளத்தோட்டம் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாதிருப்பதால், அந்த வீதியூடாகப் பயணம் செய்வோர் மற்றும் அந்தப் பகுதியில் விவசாயம் செய்வோர் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

டிப்போ வீதியிலிருந்து சுமாரான தூரத்துக்கிடையே குறுக்காக ஆரம்பிக்கும் இந்த வீதி - இணுவில் காரைக்கால் பகுதியை சென்றடைகிறது. இந்த வீதி பாரிய சேதங்கள் ஏற்பட்டு குன்றும், குழியுமாகக் காணப்படுகிறது. பருவ மழைக் காலங்களில் நீர் தேங்கி நிற்பதால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து ஏற்படும்.

இந்த வீதியை அண்டி விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவோர் தமது க்காணியின் பரப்பளவை மீறி வீதியை அண்மித்த பகுதிகளை ஆக்கிரமித்து வருவதால், எதிர்காலத்தில் கனரக வாகனங்கள் எதுவும் செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியபோதும் - இது சம்பந்தமாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனவும் பொது மக்கள் விசனம் தெரிவித்தனர். (82)

# மின்சாரசபை திருத்த சட்டம் அரசியலமைப்புக்கு முரண்!

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு

மின்சாரசபையின் திருத்தச்சட்ட மூலம் சட்டவிரோதமானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இது தொடர்பாக உயர்நீதிமன்றம் தனது முடிவை சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ளது. சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார நேற்று உயர் நீதிமன்றத்தின் முடிவை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

மின்சாரசபையின் திருத்தச்சட்ட மூலம் அரசியலமைப்புக்கு முரணானது என்றும், இதை மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலமே நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையை 6 பகுதிகளாகப் பிரித்து-வெவ்வேறு நிறுவனங்களிடம் ஒப்படைக்க அரசு திட்டமிட்டிருந்ததும்-அதற்கு ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

# மத ஒருமைப்பாட்டு அமையம் வடமராட்சியில் அங்குரார்ப்பணம்!

யாழ்ப்பாணம்

மக்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் சமயங்களுக்கு இடையிலான ஒருமைப்பாட்டு அமையம் வடமராட்சியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய பங்குமனையில் அருட்தந்தை சி.ஆனந்தகுமார் தலைமையில் இந்த அமையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மதங்களுக்கிடையேயான புரிந்துணர்வு உடன்பாடு, சமாதான அவசியம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பாடு சமாதானத்துக்கான கூட்டுப்பிரார்த்தனை செயல்பாடு என்பன அமையத்தின் அடிப்படை நோக்கமாகுமென விளக்கப்பட்டது.

மேலும் இந்த நல்நோக்கத்தின் பொருட்டு - அமையத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான சர்வமத செயற்பாட்டுக்குழுவொன்று அமைக்கப்பட்டது. இந்து குருமார் சார்பில் - சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணி தேசிகர் எஸ்.நந்தகோபால குருக்கள், வி.பாலசந்திரக் குருக்கள், எஸ்.விக்னராசா குருக்கள், ஏ.திருஞானசம்பந்தர் குருக்கள், ஜெயபாலசந்திர குருக்கள், எஸ்.திருக்குமார குருக்கள் ஆகியோரும் -

கத்தோலிக்க திருச்சபை சார்பில்- அருட்தந்தை இருதயதாஸ், அருட்தந்தை எஸ்.ஆனந்தகுமார், அருட்தந்தை எம்.பத்திநாதர், அருட்தந்தை ஜோசப் ஆகியோரும் -

மெதடிஸ்த திருச்சபை சார்பில்- வண.டி.அழகராசா, வண.என். அருள்நாதன், சகோ.கே.திருச்செல்வம் ஆகியோரும் -

தென்னிந்திய திருச்சபை சார்பில் - வண.வீ.என். தர்மகுலசிங்கம், சகோ.டானியல் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு மாதமும் இறுதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (13)

# பண்ணிசைக் கச்சேரி

யாழ்ப்பாணம்

அகில இலங்கை திருமுறை மன்றம் நடத்தும் திருமுறை விழா இன்று காலை 7 மணிக்கு நல்லூர் சிவன்கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் திருமுறை மன்றத்தின் தேவார பண்ணிசை ஆசிரியர் ஆர். திருஞானசம்பந்தனின் மாணவர்களான சி.சுகந்தினி, ந.நிசாந்தினி, ம.ஜெயப்பிருந்தா ஆகியோர் தேவார பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்தவுள்ளனர்.

# வன்னியிலிருந்து வந்த பெண்ணை முகமாலையில் காணவில்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்

கிளிநொச்சியிலிருந்து யாழ். நோக்கிவந்த பெண்ணொருவர் முகமாலை சோதனைச் சாவடியில் காணாமற்போயுள்ளதாக அவரது மகன் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மடத்தடி லேன் மானிப்பாயைச் சேர்ந்த சோமசுந்தரம் கமலாதேவி (வயது 64) என்பவரே காணாமற்போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாயும், மகனும் கிளிநொச்சியிலிருந்து நேற்றுக்காலை முகமாலையூடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வேளை- முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் பஸ்ஸுக்காக காத்திருந்தவேளை தாயார் காணாமற்போனதாகவும், தாயாரை அந்தப் பகுதியில் தேடிப் பார்த்தபோது படையினர் தன்னை அச்சுறுத்தி அங்கிருந்து செல்லுமாறு மிரட்டியதாகவும் - இதனால், தான் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததாக அவரது மகன் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் அதிகாரி - முகமாலை சோதனை நிலைய இராணுவ அதிகாரி மற்றும் கொடிகாமம் பொலிசாரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது - குறித்த பெண்ணை கைது செய்யவில்லை எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அலுவலக இணைப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த சண்முகானந்தன் ரமேஸ்குமார் (வயது 30) என்பவர் கடந்த 2ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளதாக அவரது மனைவியால் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர் தனது வீட்டிலிருந்து பொருட்கள் வாங்குவதற்காக கடைக்குச் சென்றதாகவும் அதன் பின்னர் இன்றுவரை வீடுதிரும்பவில்லை எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பேச்சு மூலமே தீர்வு என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறதாம்

## —புதுடெல்கியில் மங்கள சமரவீர—



கொழும்பு—

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை தாம் ஏற்றுக்கொண்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

புதுடெல்கியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களான எ.பி.பரதன், து.ராஜா ஆக்யோருடன் நேற்றுமுன்தினம் மங்கள சமரவீர ஆலோசனை நடத்தினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையகத்தில் 30 நிமிடம் வரை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் மங்கள சமரவீர கூறியதாவது -

எங்கள் மீது போராளிகள் தாக்குதல் நடத்தினாலும் - நாம் போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஈடுபாட்டுடன் மதித்து நடக்கிறோம்.

நாங்கள் பேச்சு மேசைக்கு திரும்புவோம் என்று இப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளோம். சர்வதேச சமூக அழுத்தத்தால் விடுதலைப் புலிகளும் இதையே உணர்ந்திருப்பார்கள்.

இலங்கையில் அதிகரித்து வரும் நிலைமைகள் குறித்து தீவிரமாக இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்களுடன் விவாதித்தோம். பேச்சுக்கள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோமென மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எ.பி.பரதன் - இலங்கையில் வன்முறைகள் நீடிப்பதை நாங்கள் விரும்பவில்லை. பேச்சுக்களை விரைவில் தொடங்க வேண்டும். இராணுவ வழியிலான தீர்வைத் தவிர அனைத்து வாய்ப்புக்களையும் பயன் படுத்தி விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டு வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

# விமானத் தாக்குதல் நடத்துவதை நியாயப்படுத்த முடியாது!

## முன்னாள் விமானப்படை தளபதி

கொழும்பு—

மாவிலாறு நீரைப் பெறுவதற்காகத்தான் விமானப்படையினர் தாக்குதலை நடத்துகின்றனர் என்றால் அதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது—

மாவிலாறு நீருக்காகத்தான் இந்தத் தாக்குதல் என்பது உண்மையாக இருக்குமேயானால் - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உண்மையாகப் பேச்சு நடத்தி 48 மணிநேரத்தில் நீரைப் பெற்றிருக்கமுடியும்.

நாம் இந்தப் போரைத் தவிர்த்திருக்கலாம்.

ஆனால், எதிர்பாராதவிதமாக இருதரப்பும் மோதவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

அரசாங்கத்தைப் போருக்குத் தள்ளியது ஜே.வி.பிதான். இதன்மூலம் தீர்மானிக்கின்ற சக்திகளாக ஜே.வி.பியினர் மாற நினைக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

விமானப் படையின் தாக்குதலை விமர்சித்துள்ள ஹரி குணதிலகவின் மகன்தான் தற்போது விமானப்படையின் தளபதியாகவுள்ள எயார் வைஸ் மார்ஷல் றொசான் குணதிலக என்பது குறிப்பிடத்தக்கது.

# காயமுற்ற 10 பேர் மட்டக்களப்புக்கு!

திருகோணமலை—

சம்பூர் - பாட்டாளிபுரம் பிரதேசத்தில் படையினரின் ஷெல் வீச்சில் காயமடைந்த பத்துப் பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினரின் உதவியுடன் இவர்கள் மட்டக்களப்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

4 பெண்களும், 6 சிறுவர்களும் சம்பவ இடத்திலிருந்து வெருகல் பகுதியூடாக அழைத்துச் செல்லப்பட்டு வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

# புலிகளின் பிரதேசங்களில் பணியாற்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தடை

அம்பாறை —

அம்பாறையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை- அங்கு பணிக்குச் செல்வதற்கு காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினர் தடைவிதித்துள்ளனர்.

அம்பாறை, தங்கவேலாயுதபுரம் உள்ளிட்ட விடுதலைப் புலிகளின் நிர்வாகப்பகுதிகளில் தமிழ் மக்களுக்கு சேவையாற்றி வரும் அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள் காஞ்சிரங்குடா பகுதி ஊடாகவே செல்வது வழக்கம்.

வழமைபோல் நேற்று முன்தினம் காலை காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை சோதனைச் சாவடியூடாகப் பணிக்குச் செல்லும் போது அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்களை அதிரடிப்படையினர் தடுத்து நிறுத்தியதுடன், புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களில் பணிகளைச் செய்யக்கூடாது என்றும் அச்சுறுத்தி திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடவுள்ளதாக சோவா தொண்டு நிறுவன ஊழியர்கள் தெரிவித்தனர்.

அம்பாறை - தம்பிலுவில் பகுதியில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் நேர்ப் திட்டப் பொறியியலாளரான க.மோகன் (வயது 26) என்பவர் துணை ஆயுதக்குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டார்.

இவரைக் கடத்திய துணை ஆயுதக்குழுவினர் 40 ஆம் கட்டை விசேட அதிரடிப்படை முகாமில் தடுத்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது என்று அச்சுறுத்தப்பட்டு அவர் திருப்பி அனுப்பப்பட்டார்.

# பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தம்!

கொழும்பு—

பட்டினிக்கு எதிரான தொண்டு நிறுவனம் தனது செயற்பாடுகளை இலங்கையில் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தெரிவித்தார்.

மூதூர் நகரில் விடுதலைப் புலிகளுக்கும் - படையினருக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டதால் அந்தப் பிரதேசங்களை விட்டு இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியிருந்த மக்களுக்கு உதவி செய்வதற்காகச் சென்ற குறித்த நிறுவனத்தின் பணியாளர்கள் பதினைந்துபேர் ஒரே நாளில் படுகொலை செய்யப்பட்டனர்.

மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வந்த பணியாளர்கள் எந்தவித காரணமுமின்றி கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இத்தகைய சூழலில் தொடர்ச்சியாக எமது பணியாளர்கள் சேவையாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எமது நிறுவனம் தற்காலிகமாக சேவையை இலங்கையில் இடை நிறுத்தியுள்ளது.

ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பட்டினிக்கு எதிரான நிறுவனம் கேட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை படுகொலை செய்யப்பட்ட ஊழியர்களின் சடலங்கள் திருகோணமலையிலுள்ள தமது அலுவலகத்துக்குக் கொண்டு வரப்பட இருப்பதாக அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அவர்கள் 15 பேரும் கொலைசெய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்டதாகவும் -

எந்தவித காரணமும் இல்லாமல் அவர்கள் கொல்லப்பட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# திருமலை மாவட்டத்தில் பரீட்சைகள் ஒத்திவைப்பு

கொழும்பு—

இந்த வருடத்துக்கான 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை என்பன திருகோணமலை மாவட்டத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்கான இந்த இரு பரீட்சைகளும் எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் நடத்துவதற்குப் பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

எனினும், திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற மோதலையடுத்து அந்த மாவட்டத்துக்கான குறிப்பிட்ட பரீட்சைகளை ஒத்திவைப்பதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

# ஆட்லறி தாக்குதலில் 5 பேர் காயம்!

திருகோணமலை—

திருகோணமலை - தோப்பூரில் பொலிஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட ஆட்லறி தாக்குதலில் 5 பேர் காயமடைந்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 2 பொலிஸாரும், 3 பொதுமக்களும் காயமுற்றதாக படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

# 24 மணிநேரத்தில் அணையை திறப்போமென்றவர்கள் எங்கே?

## —எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சாட்டை—

கொழும்பு —

24 மணி நேரத்தில் மாவிலாறு அணைக்கட்டைத் திறந்து விடுவோம் என்று கத்தியவர்கள் இத்தனை நாட்களாக என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கற்பிட்டியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

தாக்கினால் திருப்பித் தாக்குவோம் என அரசாங்கம் கூறிக் கொள்வதன் மூலம் மாவிலாறு பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோரின் கருத்தைக் கேட்டு விட்டு - அனுபவம் வாய்ந்த இராணுவ அதிகாரிகளைக் கேட்காமல் மாவிலாறு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

24 மணிநேரத்தில் அணைக்கட்டு திறக்கப்பட்டு விடும் என கூறினார்கள். இன்னமும் அணைக்கட்டு திறக்கப்படவில்லை.

1991 ஆம் ஆண்டு நாம் மாவிலாறு சென்று முகாம் அமைத்தோம். அங்கு செல்வதற்கு 24 மணிநேரம் தேவைப்பட்டது. அப்போது 20 பேர் காயமடைந்தனர். ஆனால், இன்று நூற்றுக்கும் அதிகமானவர்கள் இறந்துள்ளார்கள்.




விடுதலைப் புலிகள் மூதூர் நகரைத் தாக்கி உள்நுழைந்தனர். அங்கிருந்து சென்றவர்கள் போர்நிறுத்தம் ஒன்றை வழங்கியுள்ளனர். ஆனால், மாவிலாறு தடுப்பு அணை திறக்கப்பட்டு நீர் விநியோகிக்கப்படவில்லை. இராணுவ நடவடிக்கை மூலம் திறந்து விடுவோமெனக் கூறிக்கொள்கின்றனர். இது எந்த வகையில் நியாயமானது.

மாவிலாறு அணை நோக்கி இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கும் போது அரசாங்கத்திடம் சரியான மதிப்பீடு எதுவும் இல்லாததால் மூதூர் நகரைச் சேர்ந்த மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

# அதிகாரப் பரவலாக்கல் ஆவணம் இலங்கைக்கு வழங்கியது இந்தியா

புதுடெல்கி—

அதிகாரத்தைப் பரவலாக்குவது தொடர்பாக இந்திய அரசாங்கம் - இலங்கைக்கு எழுத்து மூலமான ஆவணமொன்றை வழங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியலமைப்பு விடயங்கள், சட்டம் தொடர்பான யோசனைகள் அடங்கிய ஆவணமொன்றை இந்திய அரசாங்கம் புதுடெல்கியிலுள்ள இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரிடம் கையளித்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்திய முறையிலான அதிகாரப்பரவலாக்கம் மற்றும் இலங்கைக்கு உரித்தான வகையில் தீர்வு குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அரசாங்கமும் ஆலோசித்து வரும் இந்தவேளையில் - இந்தியா இந்த ஆவணத்தைக் கையளித்தமை முக்கிய விடயமாகக் கருதப்படுகிறது.

குறித்த ஆவணம் புதுடெல்கியிலுள்ள இலங்கைத் தூதுவரால் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும், அந்த ஆவணம் அரசியல் தீர்வு காண நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவிடம் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆயுதக் களைவை வற்புறுத்தினால் அமைதிப் பேச்சுகள் பாதிக்கப்படும்

## நேபாள அரசுக்கு மாவோயிஸ்டுகள் எச்சரிக்கை




காத்மண்டு—

ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினால் அமைதிப் பேச்சுவார்த்தை பின்னுக்குத் தள்ளப்படும் என்று நேபாள அரசுக்கு மாவோ கிளர்ச்சி வாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

'ஜனநாயகத்தில் மன்னர் மாவோயிஸ்ட்டுகள் மற்றும் சமூகத்தில் ஒவ்வொரு பிரிவுக்கும் இடம் அளிக்க வேண்டும். இதன் மூலம் யாருக்கும் அதிருப்தி ஏற்படாது' என்று நேபாள நாட்டின் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா கருத்துத் தெரிவித்திருந்தார். இதற்கு மாவோயிஸ்ட்டுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மாவோயிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவரான பாபுராம் பட்டாராய் நேற்று முன்தினம் நேபாள தொழில் அதிபர்கள் மற்றும் வியாபாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது -

நேபாளத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை இன்னும் முதல் கட்டத்தை அடையாத நிலையில், அரசும் மற்ற அரசியல் கட்சிகளும் ஆயுதங்களைக் கீழே போடும்படி எங்களை வலியுறுத்தினால் அமைதி நடவடிக்கை பின்னுக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

அதனால் நாங்கள் முன்பைப் போல காடுகளுக்குச் சென்று விடுவோம் என்று அர்த்தம் கொள்ளக் கூடாது. தலைநகர் மற்றும் இதர நகர்ப்புறங்களில் அமைதிப் போராட்டத்தை நடத்துவோம்.

ஏழு கட்சிகள் அடங்கிய கூட்டணி அரசு அமைதி ஒப்பந்தத்தை மீறி வருகிறது. அரசும் கட்சிகளும் அமைதி ஒப்பந்தத்தை மீறி இராணுவத்தையும், மன்னரையும் பாதுகாக்க முயற்சித்தால் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகிப் போராடத் தொடங்குவோம். ஆனால், அமைதி முறையில்தான் போராட்டம் நடைபெறும்.


இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

நேபாள அரசுடன் நடந்துவரும் அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் ஒக்ரோபர் புரட்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். ஜனநாயக ரீதியான சாதனைகளை முறியடிப்பதற்கு மன்னர் மாளிகை சதிவேலைகளில் ஈடுபடலாம் என்று மாவோயிஸ்ட் இயக்கத்தின் தலைவர் பிரசந்தர் அண்மையில் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேபாள மன்னருக்கு மொத்தம் நான்காயிரத்து 250 ஏக்கர் நிலம் உள்ளது. நேபாள சட்டப்படி ஒருவர் 17 ஏக்கர் வரை நிலம் வைத்துக் கொள்ளலாம். அதிக நிலம் வைத்துள்ள மன்னரின் நிலங்கள் நிலமற்ற ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும் என்று நேபாள நாட்டின் நில சீர்திருத்தம் மற்றும் நிர்வாக துறை அமைச்சர் பிரபு நாராயண் சவுத்ரி கூறியதாக, 'ஹிமாலயன் டைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அவர் மேலும் கூறியுள்ளதாவது -

சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் யாரும் இல்லை. அது அரசாக இருந்தாலும் அல்லது நிலப் பிரபுக்களாக அல்லது வேறு எந்த நபராக இருந்தாலும் சரி, எவர் மீதும் அரசு நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்தார்.



நேபாளத்தில் மன்னர் ஞானேந்திராவே மிகப் பெரிய பணக்காரர் என்பது குறிப்பிடத்தக்கது.

## லெபனானின் பெக்கா பள்ளத்தாக்கில் இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல் !



பெய்ரூட்—

இஸ் ரேல், லெபனானின் பெக்கா பள்ளத் தாக்குப் பகுதியில் போர் விமானங்கள் மூலம் தொடர் தாக்குதல் நடத்தியது. இதில் பெருமளவானோர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது காயம் அடைந்தவர்கள் பற்றிய விபரம் உடனடியாகத் தெரியவில்லை.

பெக்கா பள்ளத்தாக்கின் கிழக்குப் பகுதியிலுள்ள பால்பெக் என்ற நகரில் அடுத்தடுத்து நான்கு பெரிய இடியோசை போன்ற குண்டு வெடிப்புச் சத்தங் கள் கேட்டன. பல கிலோ மீற்றர் தொலைவுக்கு இந்த ஓசை எதிரொ லித்தது. குண்டுகள் விழுந்த இடம் நகர்ப்புறம் என்பதால் சேதம் கடுமையாகவே இருக்கும் என்று தெரிகிறது.

இஸ்ரேலிய எல்லைக்கு 100 கிலோ மீற்றர் தொலைவிலேயே லெபனான் பகுதிக்குள் ஹிஸ்புல்லாவின் தளங்கள் பல உள்ளன.

கடந்த புதன்கிழமை இந்தப் பகுதிக்குள்தான் இஸ்ரேலிய கொமாண்டோக்கள் தரையிறங்கி ஹிஸ்புல்லாக்கள் என்று சந்தேகித்தவர்களைத் தாக்கினர்.

பலரைத் தங்களுடனேயே துப்பாக்கி முனையில் இஸ்ரேலுக்குக் கடத்திச் சென்றனர். அந்தந் தாக்குதலில் லெபனான் பகுதியில் 16 பேர் இறந்தனர்.

ஹௌளா என்ற கிராமத்துக்குள் கடந்த திங்கட்கிழமை அதிகாலை நுழைந்த இஸ்ரேலிய இராணுவத்தின் அதிகாரியையும், 3 வீரர்களையும் தாங்கள் சுட்டுக் கொன்றதாக ஹிஸ்புல்லா கூறுகிறது. இஸ்ரேல் இராணுவம் அதை மறுக்கிறது. 4 பேர் காயம் அடைந்தனர் என்றும் தங்களுடைய தாக்குதலில் ஹிஸ்புல்லாக்கள் தான் அடிவாங்கிக் கொண்டு ஓடினர் என்றும் தெரிவித்தது.

தங்களுடைய வீரர்கள் 12 பேரை ரொக்கட் குண்டுகளால் கொன்ற ஹிஸ்புல்லாவை அவ்வளவு எளிதாக விட்டுவிடக் கூடாது என்று இஸ்ரேல் கருதுகிறது. இஸ்ரேல் பிரதமர் எஹுீத் ஓல்மர்ட் ராணுவ உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## உலகச் செய்திகள்

## வெடிக்கத் தயாராகும் பிலிப்பைன்ஸ் எரிமலை



மணிலா—

பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியில் உள்ள மயோன் எரிமலை எந்த நேரத்திலும் வெடிக்கத் தயாராக இருக்கிறது.

இதனால் அதன் சுற்றுப் பகுதியில் வசிக்கும் 50 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த எரிமலை 6 முறை வெடித்துச் சாம்பலைக் கக்கியது. அப்போது கக்கப்பட்ட சாம்பல் அரை மைல் தொலைவுக்கு காற்றில் கலந்து பறந்தது. இந்த எரிமலை 8ஆயிரத்து 118 அடி உயரம் உள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள 22 எரிமலைகளில் மயோன் எரிமலையும் ஒன்று. இது 1993 ஆம் ஆண்டு எரிமலைக் குழம்பை கக்கியபோது 79 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கில் குண்டுவெடிப்பு; 19பேர் பலி; 8பேர் காயம்!



பக்தாத்—

ஈராக் தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பத்தொன்பது பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 8 பேர் காயமடைந்தனர். மினிபஸ் மற்றும் கார் ஒன்றே இந்தக் குண்டு வெடிப்பில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வீதி யோரமாக இடம் பெற்ற இருவேறு குண்டு வெடிப்புக்களில் மூன்று பொலி ஸார் காயமடைந்ததாக ஈராக்கிய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தலைநகர் பக்தாத்தில் பாதுகாப்பு மிகவும் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் நாளாந்தம் டசின் கணக்கான மக்கள் கொல்லப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. தலைநகர் பக்தாத்தின் பாதுகாப்புக்காக 4 ஆயிரம் அமெரிக்கப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## இஸ்ரேலின் தாக்குதலுக்கு எதிராக அரபு நாடுகளின் ஆதரவு வேண்டும்

### லெபனான் பிரதமர் கோரிக்கை



லெபனான்—

லெபனான் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக் கெதிராக அரபு நாடுகள் லெபனானுக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென லெபனான் பிரதமர் ஃபவொத் அஸ் சென்னோரா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பெய்ரூட்டில் அரபு நாடுகளின் வெளி விவகார அமைச்சர்கள் மத்தியில் உரையாற்றியிருந்த அவர் தங்களுடைய கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் கூட தெற்கு லெபனானில் இருக்கின்ற ஹவ்லா என்ற கிராமம் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர்.

குறிப்பிட்ட ஹவ்லா சண்டை தொடர்பாக ஐ.நா.வில் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ள தீர்மானத் தில் - லெபனானில் இருந்து இஸ்ரேல் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்பது சேர்க்கப்பட வேண்டும் என்ற தன்னுடைய கோரிக்கைக்கு அரபு நாடுகள் ஆதரவு கொடுக்க வேண்டுமென அவர் கூறினார்.

இதே நேரத்தில் அரபு ராஜாங்க முயற்சிகள் ஒரு முடிவைக் கொண்டு வருவது போல தோன்றாவிட்டால் இஸ்ரேல் தரை மார்க்கமாக மேற்கொண்டு வரும் நடவடிக்கையை விரிவாக்கும் என்றும் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் அமீர் பேரட்ஸ் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

# க.பொ.த (சா/த) பரீட்சை மாதிரி வினாத்தாள்

## ENGLISH IANGUAGE -(I) ONE HOUR

**Answer all Question on this Paper it self**

(5Marks)

Test 1

**Read the following story and fill in the blanks. Use the words given in the box the first one is done for you.**

**Give,Tall, not ,thought, on the way, was**

One day a Farmer (1)was going to his paddy field (2)............he met his old school friend. He was very(3) ............ and fat. But (4)............beauty.Not only that he had lot of money. The farmer (5)............ and asked him to (6)............ thousand rupees. But ............what happened After that?

(5Marks)

Test 2

**Complete the following dialogue use the words/phrases given in the box. The first one is done for you.**

**Good buy, Jaffna, Duration, course, Follow, Have to**

Arthy - I (1) have to improve my English knowledge how can?

Thilee - You must (2) ............ an English course

Arthy - Where can i follow the English (3) ...............

Thilee - You can follow this course at the (4) ............ technical col lege.

Arthy - can you tell me (5) ....................of the course?

thilee - I think that is 2 years
Arthy - Ok. Thank you.
Thilee - (6) ........... ............

(5Marks)

Test 3

**Read the following information and fill in the invoice. One is done for you.**

Mr.Suresh bought a computer from the office supplies (pvt) Ltd on 30 th July 2006. The computer number was Hp 510 and price was 44000/= Mr.Suresh address is No.5 hospital road Kandy and the ad dress of office supplies (pvt)Ltd is P.o box 615, Galle. The com pany gave 10% discount. The invoice number was 212.

INVOICE

From 1) ............................ Invoice number 3) ----222------
............................
............................

To 2) ............................ Date 4) ............................
............................ Discount 5) ............................

quantity describtion computer price
6) ............... 7) ............... 8) ............... 9) ...............
less 10%
Discount 10)...............
Net 11)...............

(5Marks)

Test 4

**Read the following news items and complete the table given it. On is done for you.**

### A GOLD SMUGGLE SEIZED

Gold weighing 1079 grams and valued at Rs.58,000 was seized Yesterday from two men at Katunayake by the custom officers. They have been remanded in custody for 15 days. The men aged 27 and 28 were Robert and Martin by names. the gold had been concealed inside of underwears.

| Things Smugglied | Name of Persons | Age | Value | Quantity | Place |
|---|---|---|---|---|---|
| 1 ............... | 2............... | 3............... | 4............... | 5............... | 6 katuna yake |

(5Marks)

Test 5

write a discription on one of the following.

My Country, My pet, My Favourite hobby

..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

Test 6

(5Marks)

**write a paragraph about what you will do if you get an internet connection. you may begin in the following way.**

If i get an internet connection I will

..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

Test 7

(5Marks)

**Read the following passage carefully and answer the questions given below.**

## Fuses

We put fuses into electric appliances to make electric appliances safe. Radios, television sets, heaters and refrigerators are all electric appliances. These appliances have fuses.

A fuse is a small piece of wize. When too much electricity tries to pass through the fuse, it melts. When there is something wrong with an electrical appliance, too much electricity may flow into it. Then the fuse will melt. The electricity will not be able to cross the broken fuse wire, and the appliance will be safe.

Not all fuse are the same size. Some appliance need more electricity than others. An electric heater will usualy need a current of 15 amps. A radio will need current 5 amps. Fuses must be the correct size for the appliance. When a fuse is too large, it does not melt quickly enough. Then the appliance may get too much electricity and it is not safe.

1. Why do we put fuses into electric appliance?
   ..........................................................
2. Write the names of three (03) electric appliance?
   1.................... 2 .................... 3....................
3. Do the refrigerators have fuses?
   ..........................................................
4. What is a fuse?
   ..........................................................
5. What happens to the fuse when too much electricity passes through it?
   ..........................................................

(5Marks)

Test 8

**you are going to open a class room library in your school. write a notice for grade 11 students to inform them. include the following points.**

- the day / date / time / venue
- how to collect the books to this library.
- purpose of this library.

(use about 75 words)

..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

**Famous teacher in Jaffna**

# க.பொ.த (சா/த) பரீட்சை மாதிரி வினாத்தாள்
# ENGLISH IANGUAGE - (II)

Test 9 (5 marks)

fill in the blanks using the correct form of the verb given with in the brackets.

**The first one is done for you**

1. she (1) went home three days ago (go)
2. close the door quietly because he (2).............................. to sleep (try)
3. The film (3)................................. at 9 p.m. every night (start)
4. He (4)........................... teaching here since in 2000. (has)
5. Next year you and i (5)............................in London to study. (will be)
6. Usually my English teacher (6) ................................ us. (teach)

Test 10 (5 marks)

VACANCY
STENOGRAPHER

An immidiate vacancy exists for an efficient stenographer in the Head Office of a presetious Group of companies.
The ideal candidate would meet the following requirements.

* Have a good educational background with minimum G.C.E (O/L)six subject with credit passes for English and Maths in one sitting and an excellent command of the English Language.
* Minimum of five years work experience as a Stenographer in a reputed mercantile establishment.
* Computer literacy, through not essential will be a distinet advantage.
* Salary is negotiable and package of other benefits awaits the right candidate.

DIRECTOR,
P.O.Box - 715,
COLOMBO.

1. What is the post advertised?
2. Where do you find the vacancy?
3. What is the educational qualification required for the post?
4. How many years of working experience does the applicant need?
5. To whom should applications be sent?

Test 11 (5 marks)

Match the questions with the anwsers write the numbrr of the ques tion in the correct box. The first one is done for you.

01. What is your surname?
02. How many brothers and sisters do you have?
03. What do you going to do in future?
04. What kind of job are you looking?
05. What do you do in your leisure time?
06. Can you operate the internet?
07. When did you study in Grade 5 ?
08. If you want to spend your free time?
09. How many members in your family?
10. What do you think about the street children?
11. Are you going to study further education?

| | |
|---|---|
| I have ten sibling | ( ) |
| I studied in 2000 | ( ) |
| Usually i use the computer | ( ) |
| Like to spend my free time | ( ) |
| My family name is suresh | ( 1 ) |
| I wish to study A/L | ( ) |
| Watching tele serial | ( ) |
| We want to establish street school | ( ) |
| I am going to join family business | ( ) |
| Like business | ( ) |
| There are ten members in my family | ( ) |

Test 12 (10 marks)

Read the following letter and complete the blanks correctly using the words given in the list below:

Technical College a) ......................................
03rd November 2004 b) ......................................
Weerasiri Restaurant
Kandy
Dear sir,

Supply of Lunch

The students of the (c) ........................... certificate in Stenography at the above Institute will (d) ............................... your town on 10th of November to conduct a field (e).................................. we intend to have our lunch in your (f) ................................ please quote your prices for a decent (g) ......................... with rice and four curries and fish or (h)........................... to be followed by ice cream. The total (i) .............................. will be 30 including thedriver and his (j)....................................... Thank You.

| | | | |
|---|---|---|---|
| 1. Visit | 2. National | 3. Manager | 4. Number |
| 5. Chicken | 6. Survey | 7. Lunch | 8. assistant |
| 9. resturant | 10. Matara | | |

Test 13 (5 marks)

write on one of the following
( use about 100 wrods)

a) an English novel i read recently
b) an interesting person i like to speake
c) a visit to a zoo

..............................................................................
..............................................................................

Test 14 (10 marks)

write on one of the following - (use about 100 words)

a) write a letter to your class teacher you are unable to come to school to day include the following
reason for the absance, apologize to your teacher.
b) you wish to spend your holidays with your friend write a letter to your friend include the following
How to meet him / her, How to spend the holidays to see some interesting places

Test 15 (10 marks)

Read the passage given below and answer the questions that follow.

singapore is Asia's cleanest city. Its air is better than in most adavanced nations. It has attained.asia s second highest living standard and the average singaporean lives to a ripe age of 76.its rivers and lakes teem with fish.

singapore like most other asian cities started in poverty.with care ful planning by authorities and through public campaign it has been tranformed into a modern, well planed city, with proper public and private housing for all citizens, with efficient transport and pollution under control.

today singapore keeps itself spick and span with strict controls on vehicles and industries, and a series of fines for littering and chewing gum. singapore wants to turn itself into the world s most environment friendly country by the year 2000.a wide education campaign has been undertaken to make the citizens more concious of the enviroment and also to control the wastage of resources. officials in singapore say that through foreigners may laugh at their fines for littering and chewing gum,, punitive action and re wards have been highly effective.

the government also feels that one of the best ways of bringing the country's environment campagin to the home and family is by way of its children. There fore an education campaign at the primary and secondary school level has also been launched and this has proved very successful.

(1) from paragraph one pick out 03 facts which show that singapore has looked after its enviroment.
(2) state three features that can be seen in the modern city of singapore.
(3) what are the mesures taken at present to keep the city clean ?
(4) what are the two features of the campaign to make singapore a model green city by 2000?
(5) according to the passage how does the environment campaign in schools help singapore?
(6) each paragraph in this passage carries an idea. these ideas are given in jumbled form below.put them in the correct order.
efforts to maintain cleanliness ..........................................
a modern city ..........................................
educating children in environment protection ......................
asia s cleanest city ..........................................
(7) what do the follwing words refer to?
its in paragaraph 01 ..............................
their in paragraph 03 ..............................
its in paragraph 04 ..............................
this in paragraph 04 ..............................

Test 16 (10 marks)

Write on one of the following use about 200 words.

a) Write an essay on street children
getting food, getting Education, supporting family
b) Natural disasters of the world include the following items
Tsunami, flood, drought, earth quake
c) write an article about How to seek a job and how to apply example get the information throught the internet
apply through the E-mail

..............................................................................
..............................................................................

# நாட்டில் சமாதானம் வேண்டி வலுவிழந்தோர் நகரில் பேரணி






யாழ்ப்பாணம் —

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து வலுவிழந்தவர்களும் இணைந்து சமாதானத்துக்கான சர்வமதப் பிரார்த்தனையையும், அமைதிப் பேரணியையும் நேற்று முன்தினம் நடத்தினர்.

யாழ். மாவட்டத்தில் போரால் வலுவிழந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இந்த வலுவிழந்தவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையிலேயே இந்த சர்வமதப் பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் மகேந்திரன் தலைமையில் சர்வமதக் கூட்டுப் பிரார்த்தனை நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் - சர்வதேச இந்து குருமார் பீடச் செயலாளர் சுப்ரமணிய ஐயர், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கத்தோலிக்க திருச்சபை குருமுதல்வர் நீக்கிலஸ் அடிகளார், அங்கிலிக்கன் திருச்சபை குருமுதல்வர் நேசகுமார், தென்னிந்தியத் திருச்சபை குருமுதல்வர் ஆனல்ட் அடிகள், ஜும்மா பள்ளிவாசலைச் சேர்ந்த ப்றான் மற்றும் யாழ். நாகவிகாரை விகாராதிபதி வண.தேரர் ஏ.ஞானகாந்தனா ஆகியோர் கலந்துகொண்டு ஆசியுரைகளை வழங்கினர்.

பிரார்த்தனை நிகழ்வு முடிவுற்றதும் - கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்திலிருந்து சமாதானப் பேரணி ஆரம்பமாகி கே.கே.எஸ் வீதியூடாக ஆஸ்பத்திரி வீதியைச் சென்றடைந்து, ஆஸ்பத்திரி வீதியூடாக யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்துக்குச் சென்று அங்கு வைத்து ஐக்கிய நாடுகள் செயலாளருக்கான மகஜரை யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதியிடம் கையளித்தனர்.

தொடர்ந்து யாழ். மாவட்ட செயலகத்துக்குச் சென்ற பேரணியினர் யாழ். அரச அதிபர் கே.கணேஷிடம் ஜனாதிபதிக்கான மகஜரைக் கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கொடிய யுத்தம் ஒன்று மீளவும் எமது நாட்டில் ஆரம்பித்து விடுமோ என்ற அச்சம் எமது மனங்களில் எழுந்திருக்கிறது. மீண்டும் ஒரு யுத்தத்தைச் சந்திக்கக்கூடிய அல்லது எதிர்கொள்ளக்கூடிய பலம் எம்மிடம் இல்லை. ஏனெனில், யுத்தத்தின் கொடிய விளைவுகளை நாம் சந்தித்து விரக்தியில் வாழ்கிறோம்.

யுத்தத்தால் ஏற்பட்ட அனர்த்தங்கள் பல. குறிப்பாக - பலர் அங்கவீனர்களாக ஆக்கப்பட்டு அவலநிலைக்கு உள்ளாகியிருக்கிறோம். அங்க இழப்பை எதிர்கொள்ளும் ஒரு நபர் உடல், உள சமூக பொருளாதார பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. பிறப்பாலும் அங்கவீனர்களாய் இருப்போர் பல பாரிய உள நெருக்கீடுகளைச் சந்திக்கின்றனர்.

கடந்த பல தசாப்த காலங்களிலே யுத்தத்தின் கெடுபிடிகளால் அங்கவீனர்களில் தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது. இப்படிப்பட்ட அவலநிலை மீண்டும் ஏற்படாதவாறு எம்மைக் காத்துக்கொள்வது அனைவரினதும் கடமையாகும். அங்கவீனர்களின் தொகை அதிகரித்துக்கொண்டு போகும் பொழுது அது குடும்பங்களையும், சமூகத்தையும் ஏன் நாட்டையுமே ஒரு சாபக்கேட்டுக்கு உள்ளாக்குகிறது.

மீண்டும் ஒரு யுத்தமேற்படாமல் விழிப்புடனிருப்பது மட்டுமல்ல, நிலையானதொரு சமாதானத்துக்கான முயற்சிகள் முனைப்புடன் முன்னெடுக்கப்படவேண்டும் என்று வலுவிழந்தவர்களாகிய நாம் சம்பந்தப்பட்டவர்களை வேண்டி நிற்கிறோம்.

அத்துடன் தற்போது நிலவிவரும் யுத்தசூழலைத் தவிர்த்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என்றும் பொறுப்பானவர்களை வேண்டுகிறோம்.

அங்கவீனர்கள் சுதந்திரமாக நடமாடவும், பயணம் செய்யவும் உகந்ததொரு சூழலை ஏற்படுத்தித்தர வேண்டுகிறோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு அமைதிக்கான ஒருவழிமுறையை காணும் முயற்சியில் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டுமென்று ஆவலோடு நாம் கேட்கிறோம்.

அங்கவீனர்களாகப் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் என்றும் பொறுப்புள்ளவர்களைக் கேட்கிறோம் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### கருத்தரங்கு

மானிப்பாய் —

தென்மராட்சி வலயத்துக்கு உட்பட்ட ஆசிரிய ஆலோசகர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரிய ஆலோசகர்களை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (100)

### முன்பள்ளி விளையாட்டு விழா

மானிப்பாய் —

சாவகச்சேரி நகர சபையின் கீழ் இயங்கும் தென்.மட்டுவில் கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு இளைப்பாறிய அதிபர் க.துரைரத்தினம் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ந. இரவிராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (100)

### விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் —

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தில் உள்ள திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்லத்தின் 14 ஆவது வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை பொறுப்பாசிரியர் ஜெகஜெனனி ஜெகதீஸ்வர சர்மா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் பிரகதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக பாலர் கல்விக் கழகத்தலைவர் இராசையா ஸ்ரீதரனும், கௌரவ விருந்தினர்களாக காசிநாதன் இரட்ணகோபால், கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பாடசாலையில் அனுமதி மறுப்பு; ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

ஆரம்பப் பாடசாலையில் தனது மகளை அனுமதிக்க மறுத்ததால் தாய் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது மகளை யாழ். நகரிலுள்ள பிரபல ஆரம்பப் பாடசாலையில் சேர்ப்பதற்கு விண்ணப்பித்திருந்தார்.

ஆனால், இந்த விண்ணப்பம் பிரதேச எல்லைக்கு அப்பாற்பட்டுள்ளது எனக் காரணம் காட்டி நிராகரிக்கப்பட்டது.

இதையடுத்தே பிரஸ்தாப பெண் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

தான் கணவனை இழந்தவர் என்றும், பிள்ளையின் கல்விச் செயற்பாட்டுக்காக மிக கஷ்டப்படுவதாகவும், இவ்வாறு நிராகரிக்கப்படுவது பிள்ளையின் அடிப்படை உரிமை மீறும் செயல் என்றும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். அத்துடன், தனது பிள்ளை போன்று வேறு பிள்ளைகளும் பாதிக்கப்படக் கூடாது என்றும் -

சிபார்சின் பெயரில் பிள்ளைகளைச் சேர்ப்பது நீதியற்ற ஒரு செயல் என்றும், அவ்வாறு நீதியற்ற முறையில் எடுக்கப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் சட்டத்தின் முன் கொண்டு வந்து தனது பிள்ளையின் கல்விச் செயற்பாட்டுக்கு நியாயம் பெற்றுத் தருமாறும் அவர் கோரியுள்ளார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### கருத்தரங்கு

மானிப்பாய் —

தென்மராடசி ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 8 மணக்கு சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை அதிபர்கள் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (29)

### ஆடிப் பூரணைவிழா

மானிப்பாய் —

தாவடி - கொக்குவில் ஸ்ரீ ராம கிருஷ்ண சேவாச்சிரமத்தின் ஆடிப் பூரணை விழா இன்று காலை 9 மணிக்கு மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ''திருவிளக்கு பூசையின் மகிமை'' என்னும் விடயத்தில் ஆன்மீக உரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் நிகழ்த்துவார். (100)

### கந்த புராண பூர்த்தி விழா

மானிப்பாய் —

உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி ஆலயத்தின் கந்தபுராணப் பூர்த்தி விழா இன்று நடைபெறவுள்ளது.

ஆடிப்பூரணை தினமான இன்று மாலை 3 மணிக்கு அம்பாளுக்கும், முருகப் பெருமானுக்கும் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (100)

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம் —

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் - அடுத்த மாதம் 2 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 3 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

6 ஆம் திகதி புதன்கிழமை 6 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் அன்று மாலை 3 மணிக்கு வைரவர் பொங்கலும் நடைபெறும்.

கொடியேற்றம், கொடியிறக்கம் ஆகிய இரண்டும் பொது உபயங்கள். இந்த உபயங்களுக்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் நிதி அலுவலகத்தில் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் நகைகள் அணிந்து ஆலயத்துக்கு வருவது தவிர்க்கப்பட்டுள்ளது என்றும், திருவிழாக் காலங்களில் கோயில் வீதிகளில் எவரும் தங்குவதோ, பொழுது போக்குவதோ தவிர்க்கப்பட வேண்டும் எனவும் ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர்.

# இடைக்காடு மகாவித்தியாலய கட்டடப் பணிகள் பூர்த்தி

யாழ்ப்பாணம் —

கட்டட நிர்மாணம், அபிவிருத்தி, புனரமைப்பு போன்ற வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வரும் நிகொட், அதன் கட்டட நிர்மாணத்தின் ஒரு திட்டமாக இடைக்காடு மகா வித்தியாலயத்துக்கு அமைத்துவரும் கட்டடத் தொகுதியின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளது. விரைவில் இந்தக் கட்டடம கையளிக்கப்படவுள்ளதாகவும் நிகொட் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஊர்காவற்துறை இறங்குறை வீதியின் புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இது நான்கு கிலோ மீற்றர் தூரம் கொண்டதெனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# திருமுறைப் பெருவிழா

மானிப்பாய் —

நல்லூர் சிவன் ஆலயத்தில் இன்று காலை 7 மணிக்கு திருமுறைப் பெருவிழா ஆலயத்தின் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் - யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட இசைத் துறைத் தளலைவர் பாக்கியலட்சுமி நடராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருத சிரேஷ்ட விரிவுரையாளர் பிரம்ம ஸ்ரீ ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

இதனைத் தொடர்ந்து அகில இலங்கைத் திருமுறை மன்ற தேவாரப் பண்ணிசை மாணவர்களின் திருமுறைப் பண்ணிசை நிகழ்வும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - திருமுறை இசை வல்லார் ஜனனி நல்லைநாதன் கௌரவிக்கப்படவுள்ளார். நிகழ்வில் இறுதியாக அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை - அகில இலங்கை திருமுறைமன்றம் வருடந்தோறும் மே, ஜுன் மாதங்களில் வரும் போயா தினத்தில் ஞான நூல்களுக்கு, பூசை, வழிபாடுகளை நடத்திப் பெருவிழா எடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (100)

## --- நல்லூரில் இன்று ---

மானிப்பாய் —

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 3 மணிகது நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும்.

இந்த நிகழ்வில் - 'அருணகிரியும் திருப்புகழும்' என்னும் கருப்பொருளில் எஸ்.பாலசண்முகன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். இதைத் தொடர்ந்து மாதகல் விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறும். (100)

# மாணவர் சேமிப்பை ஊக்குவிப்பதற்கு பாடசாலையில் வங்கிக்கிளை அமைப்பு

கிளிநொச்சி—

பாடசாலை மாணவர்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கியினர் பாடசாலைகளில் மாணவர்களுக்கான விரிவாக்கல் சேமிப்பு கிளைகளை அமைத்து வருகின்றனர்.

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் ஐந்தாவது விரிவாக்கல் சேமிப்பு கிளை திறப்பு நிகழ்வு பாடசாலை மாணவர் ஜீவராஜ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை கந்தபுரம் அ.த.க பாடசாலை அதிபர் தெய்வேந்திரம் ஏற்றினார். தேசியக் கொடியை அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சிறி ஏற்றினார்.

மாணவர்களுக்கான விரிவாக்கல் கிளை அலுவலகத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

வங்கிச் செயற்பாட்டை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் செந்தில் ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் கருத்துரைகளை பாடசாலை ஆசிரியர்களான பிரசாத், ஜெயச்சந்திரன், பிரதேச பொறுப்பாளர் சிறி ஆகியோர் வழங்கினர்.

சிறப்புரையை கிராமிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சுஜன் நிகழ்த்தினார். பாடசாலை மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (கு)

# அடிக்கல் நாட்டல்

கிளிநொச்சி —

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நெறிப்படுத்தலின் கரையோர சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தில் முல்லைத்தீவு செம்மலைப் பிரதேசத்தில் பொதுச்சந்தை, மீனவர் ஓய்வுவிடுதி அமைப்பதற்கான அடிக்கல்நாட்டி வைக்கப்பட்டது.

பொதுச்சந்தைக்கான கரையோர சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட உத்தியோகத்தர் கந்தசாமி அடிக்கல்லை நாட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

செம்மலை கிழக்கில் மீனவர் ஓய்வு மண்டபத்துக்கான அடிக்கல்லை தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் மாவட்ட இணைப்பாளர் கஜிதன் அடிக்கல் நாட்டி ஆரம்பித்துவைத்தார். (கு)

# பௌர்ணமி தின திரைப்படக் காட்சி

கிளிநொச்சி —

கிளிநொச்சி அழகியல் கலாமன்றமும் வைட்விசன் கலையகமும் இணைந்து பௌர்ணமி தினத்தில் சிறந்த சர்வதேச திரைப்படங்களையும் விவரணப்படங்களையும் காட்சிப்படுத்தி வருகின்றனர்.

இதன்படி பௌணமி தினமான இன்று பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி அழகியல் கலாமன்ற மண்டபத்தில் பொன் வண்ணன் இயக்கிய "நதிக்கரையினிலே" என்னும் திரைப்படம் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திரைப்படக் காட்சியை ஆர்வலர் அனைவரையும் கண்டு களிக்குமாறு அழகியல் கலாமன்றத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (09)

# நீர்ப்பாசன திட்டம் குறித்து இரண்டாம் கட்ட செயலமர்வு

கிளிநொச்சி—

உலக வங்கியின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆம் கட்டப் பயனாளிகளுக்கான செயலமர்வு நடத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் கடந்த 4 ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கூளாமுறிப்பு, விளாத்திக்குளம், முத்தையன்கட்டு வலது கரை வித்தியாபுரம், சமணங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 80 இற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கான செயலமர்வு நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் - நியாப்திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்களையும், ஆலோசனைகளையும் முல்லைத்தீவு மாவட்ட நியாப்திட்ட பொறியியலாளர், தகவல் கல்வி தொடர்பாடல் ஆலோசகர், உதவி தகவல் கல்வி தொடர்பாடல் ஆலோசகர், தொழில்நுட்ப அலுவலர் ஆகியோரால் பயனாளிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்தச் செயலமர்வில் கிராம அலுவலர்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலர்கள் பங்குபற்றி பயனாளிகளை ஊக்குவித்தனர். (கு)

# தமிழீழ சுகாதாரப் பிரிவினரால் லஞ்சீற் பாவனைக்குத் தடை !

வட்டக்கச்சி —

சுற்றுச் சூழல் பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் லஞ்சீற் பாவனையைத் தடை செய்யுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

தமிழீழ சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தமிழீழ சுகாதார சேவையின் ஒழுங்குபடுத்தலில் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து கடந்த 5 ஆம் திகதி நடத்திய சூழல் மேம்பாட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கில் - கலந்து கொண்ட உணவகம், குளிர்பான சாலை மற்றும் சிற்றுண்டி தேனீர்ச்சாலை உரிமையாளர் களுடனான கலந்துரையாடலின் போதே இந்தத் தடை அறிவிப்பு வெளியிடப்பட்டது.

உணவகங்களில் லஞ்சீற் பாவனைக்குத் தடைசெய்யப்பட்ட போதிலும் பொதி செய்யப்படும் உணவுப் பொதிகளுக்கு மட்டும் லஞ்சீற் பாவனைக்குத் தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடித்து கழிவுகள் கிரமமான முறையில் அகற்றப்படுவதுடன் சுகாதார முறையைக் கைக்கொண்டு உணவுகள் வழங்கப்பட வேண்டுமெனவும், உணவகத்தை சுகாதாரமான முறையில் பேண வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையைக் கைக்கொள்ளத் தவறுவோர் வர்த்தக சங்கத்தினரின் சட்ட நடவடிக்கைக்குட்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (09)

# சுனாமி பாதித்தோருக்கான சுழற்சிமுறைக் கடன் திட்டம்

புதுக்குடியிருப்பு —

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மீட்சி, சுழற்சிக் கடன் திட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர்களுக்கு கடன் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைப் பணிமனையில் தலைவர் த.சிறிபாலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை வங்கி ஊடாக வழங்கும் இந்தக் கடன்வழங்கும் நிகழ்வில் - வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.அருமைநாயகம், மாவட்ட முகாமையாளர் ச.திருச்செல்வம், புதுக்குடியிருப்பு கிளைமுகாமையாளர் ச.இலட்சுமணசர்மா உட்படப் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு இந்தக் கடனை வழங்கினர்.

50 ஆயிரம் ரூபா வீதம் 82 பயனாளிகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டது. (வெ)

# குடிசார் பொறியியல் கற்கை நெறி கிளிநொச்சியில் ஆரம்பித்து வைப்பு

கிளிநொச்சி —

தமிழீழ கட்டுமான செயலகத்தினரால் 2006/2007 ஆம் ஆண்டுக்கான குடிசார் பொறியியல் கற்கை நெறி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.


கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனத்தில் முற்பகல் 11 மணிக்கு தமிழீழ கட்டுமான பொறியியல் பயிற்சி செயலகத்தின் கல்வி மேம்பாட்டுப் பகுதி பணிப்பாளர் சுந்தரலிங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் குருகுலராசாவும், தேசியக்கொடியை ஈசனும் ஏற்றினர்.

நிகழ்வில் சிறப்புரையை பொறியியலாளர் பாலசுப்பிரமணியமும், தமிழீழ கட்டுமான பொறியியற் செயலக நிறைவேற்றுப் பணிப்பாளர் துளசியும் நிகழ்த்தினர்.

இதேவேளை தமிழீழ சுகாதார சேவையினரால் சுற்றுச் சூழல் மாதம் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை முன்னிட்டு அக்கராயன் பிரதேசத் தில் சிரமதானப் பணிகள் மூலம் கந்தபுரம் பொது அங்காடி, பிரதானவீதி என்பன துப்பரவு செய்யப்பட்டன.

இதில் அக்கராயன் பிரதேச அரசியற்துறையினர், ஸ்கந்தபுரம் வருவாய் பகுதியினர், அக்கராயன் பிரதேச வர்த்தக சங்கத்தினர் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கினர்.

இந்தச் சிரமதானப் பணியில் பெருமளவான நெகிழப்பைகள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன. (கு)



# சேவடியை நாடி துதிபாடுவாய்....!

பல்லவி



சேவடியை நாடி துதி பாடு மனமே - தினமும்
சேவல் கூவி செவ்வேலனை அழைக்கையில்.......!
(சேவடியை நாடி....)

அனுபல்லவி


நாவினில் இனிக்கும் குரலோன்- அன்று
நாவல் பழந்தனில் சுவை கண்டு நல்லறிவுரைத்தோன் !
(சேவடியை நாடி......)

சரணம்

என்.பிறேமசீலன்

திருநகர் நல்லூரிலே தரித்து நின்றவா- உன்
திருவிளையாடல் கண்டோம் அருளேதும் தாருமையா....!
உருகி யுருகி உளமாறத் துடிக்கையிலே
உருகியே யருளிடுவாய் உன்னடியே சரணமையா....!
(சேவடியை நாடி......)

# காண்பது எப்போ மீட்சி?



நல்லையிலே நடப்பதுவோ உந்தன் அருள் ஆட்சி!
வல்லவனே! வள்ளி தெய்வானை சூழவரும் காட்சி!
அல்லலுற்ற அமரர்களைக் காத்து நின்ற மாட்சி!
தொல்லைகளால் துன்புறும் நாம் காண்பது எப்போ மீட்சி!

ப.மகேந்திரதாசன்

# அலங்காரக் கந்தனுக்கு அரோகரா



அலங்காரக் கந்தனுக்கு அரோகரா
ஆறுமுகக் கந்தனுக்கு அரோகரா
குலங்காக்கும் குமரனுக்கு அரோகரா
குஞ்சரியர் நாதனுக்கு அரோகரா
நலங் காக்கும் வேலனுக்கு அரோகரா
நல்லைநகர் கந்தனுக்கு அரோகரா
நிலம் காக்கும் அப்பனுக்கு அரோகரா
நிலையான தெய்வத்துக்கு அரோகரா

அ.கலாநிதி

# குமரன் வருகிறான் கூவு குயிலே கூவு



வேற்பெருமான் வருகிறான் கூவு குயிலே கூவு
விடிவு தர வருகிறான் கூவு குயிலே கூவு
ஆர்ப்பரவத்தோடு வருகிறான் கூவு குயிலே கூவு
அபயமளித்து வருகிறான் கூவு குயிலே கூவு
போர்ச் சூழல் போக்க வருகிறான் கூவு குயிலே கூவு
புனித மண்ணில் வருகிறான் கூவு குயிலே கூவு
தீர்வு தர வருகிறான் கூவு குயிலே கூவு
திருநல்லைப் பதியால் வருகிறான் கூவு குயிலே கூவு

மதுரகவி

# நல்லூர் கந்தன் பாமாலை



கந்த வடிவேலா முருகா நல்லூர் கந்தா
கங்கை உமை பாலா நல்லூர் கந்தா
சந்தனப் பொட்டழகா முருகா நல்லூர் கந்தா
தாமரை வாயழகா முருகா நல்லூர் கந்தா
பன்னிருதோளழகா முருகா நல்லூர் கந்தா
பாதச் சிலம்பழகா முருகா நல்லூர்க் கந்தா
வண்ண மயில் அழகா முருகா நல்லூர் கந்தா
வள்ளி புயத்தழகா முருகா நல்லூர் கந்தா

சின் கந்தையா திக்கரை

நமது ஈழநாடு

சிந்தனைக்கு

அவமதிப்பிற்கு அஞ்சும் பெரியோர் ஆராய்ந்து
துணியாத செயலைச் செய்ய மாட்டார்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# உணர்த்தப்போகும் உண்மை!

யுத்தத்தின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியுமென்று அரசு நம்புகின்ற பட்சத்தில் - இராஜதந்திர ரீதியில் தீர்வு காண முனைவது நேரத்தை வீணடிக்கும் செயல் என்று தனது விசனத்தை வெளியிட்டிருக்கிறார் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம்.

ஒரு புறத்தில் மாவிலாறு விவகாரத்துக்கு தீர்வு காண்பதற்கு நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயரை கிளிநொச்சிக்கு அனுப்பிவிட்டு - மறுபுறத்தில் அரசு இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டது.

இது நோர்வே தரப்பை பெரிதும் விசனத்துக்குள்ளாக்கியிருக்கிறது. இந்தச் சூழலில் அரசு தெளிவானதொரு முடிவை எடுக்க வேண்டியது அவசியம்.

ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. ஆகியவற்றின் சொற்படி ஆடிக்கொண்டு - ஒருபோதும் பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காண முடியாது. இதை மகிந்த ராஜபக்ஷவின் அரசு தெளிவாக உணர வேண்டும். ஆனால் அதை உணரும் நிலையில் அவர் இல்லை.

அதேவேளை, சர்வதேச சமூகத்தின் ஆதரவு டன் நோர்வேயை சமாதான ஏற்பாட்டாளராகக் கொண்டு வந்துவிட்டு - அவர்களின் முயற்சிகளை கேலிக்குரியதாக்குவது அநாகரிகமானது.

பௌயரின் முடிவை அரசு அர்த்தமற்றதாக்கிவிட்டது என்ற சொல்ஹெய்மின் விசனத்தின் நியாயப்பாடு முக்கியமானது.

சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த போதும் கூட நோர்வே தன்னாலான முயற்சியைத் தீவிரமாகவே மேற்கொண்டு வருகிறது. ஆனால், இந்த முயற்சியையும் அரசு கேள்விக்குரியதாக்கியதை சர்வதேச ரீதியில் இலங்கையின் பெயரைக் களங்கப்படுத்தியிருக்கிறது.

இதனைப் பற்றி அரசாங்கம் கொஞ்சம் கூட கவலைப்படுவதாகவோ, வெட்கப்படுவதாகவோ தெரியவில்லை. நடைமுறைக்கு ஒத்துவராத திட்டங்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அரசு நோர்வேயை உதாசீனப்படுத்தியிருக்கிறது.

இதன் விளைவுகள் நிச்சயம் மோசமாகவே இருக்கும். ஒரு கட்டத்தில் இலங்கை அரசு தனது பொய்ப்பிரசாரங்களின் மூலமாக- சர்வதேச ரீதியில் தலையெடுத்திருந்த போதும், இப்போது எல்லாவற்றையும் போட்டு உடைத்துவிட்டு நிற்கிறது.

அதிலும், புலிகளுடன் பௌயரைப் பேச்சு நடத்த அனுப்பிவிட்டு- புலிகளுக்கு உத்தரவாதம் கொடுக்க அவருக்கு அதிகாரம் யார் கொடுத்தது என்று அமைச்சர் கெகலிய எழுப்பிய கேள்வி நோர்வேயின் பாத்திரத்தையே காலில் போட்டு மிதித்ததற்குச் சமனானது.

ஏன் இப்படிப்பட்ட கருத்துக்களை அரசு வெளியிடுகிறது? சமாதான முயற்சிகளில் ஆர்வம், நம்பிக்கை இல்லையா- அல்லது நோர்வேயில் நம்பிக்கை இல்லையா?

எதுவாயினும் அரசு பகிரங்கமாக அறிவித்துவிடலாமே. சமாதான முயற்சிகளில் அவர்களுக்கு நம்பிக்கையில்லாவிடின் அதை முறைப்படி அறிவித்துவிட்டு விலகிக் கொள்ளலாம்.

அல்லது நோர்வேயில் நம்பிக்கையில்லாது விட்டாலும் அவர்களை வெளியேற்றலாம். எதையுமே செய்யாமல், ஜே.வி.பி., ஹெல உறுமய என்பன இதுவரை எப்படிக் கொக்கரித்தனவோ - இப்போது அரசும் அதே வழியில் கொக்கரிப்பது எந்தவகையில் நியாயமாகும்.

சமாதான முயற்சிகள் என்பது கடைசிக் கட்டத்துக்கு வந்துவிட்டது என்பதை அரசின் போக்கிலிருந்து உணர முடிகிறது.

ஆனால், இன்று அரசு நடந்து கொள்கின்ற முறை கடந்த நான்கு ஆண்டு காலமாக சர்வதேசத்தை பொய்ப்பிரசாரத்தின் மூலம் நம்ப வைத்த அனைத்துமே வெறும் பொய் என்ற உண்மை உலகுக்கு உணர்த்தப்போவது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com




# புலிகளின் நிபந்தனைகளை ஏற்க பௌயருக்கு உரிமையில்லையாம்!



## அரசு தெரிவிப்பு

கொழும்பு—

தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைக்கும் நிபந்தனைகளை ஒப்புக்கொள்ள நோர்வே சிறப்புத் தூதுவர் ஹன்சன் பௌயர் மற்றும் நோர்வே குழுவினருக்கு எதுவித உரிமையும் இல்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் கெகலிய ரம்புக்வெல கூறியதாவது -

தமிழீழ விடுதலைப்புலிகள் விதித்த நிபந்தனைகளை ஒப்புக்கொள்வதற்கு முன்பாக இலங்கை அரசாங்கத்திடம் நோர்வே பிரதிநிதிகள் தெரிவித்திருக்க வேண்டும். அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவராமல் நிபந்தனைகளை ஒப்புக்கொள்வதற்கு நோர்வே பிரதிநிதிகளுக்கு எதுவித உரிமையுமில்லை.

நீர், அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட மனிதாபிமானத் தேவைகளை நிபந்தனையாக முன்வைப்பதை அரசாங்கம் ஏற்காது. இத்தகைய நிபந்தனைகளை அரசாங்கம் நிராகரிக்கிறது.

நாட்டினது அணைக்கட்டு நிர்வாகங்களைப் பயங்கரவாதிகள் கையில் ஒப்படைக்க நாங்கள் தயாராகவில்லை. அணையை மூடுவதும், திறப்பதும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இருக்கவேண்டும்.

அணைக்கட்டுப் பகுதியை படையினர் நெருங்கிவிட்டனர். நீர்ப்பாசனத் திட்டப் பொறியியலாளர்களும் அணையை நெருங்குகின்றனர். இன்னும் சில மணி நேரங்களில் அணை திறக்கப்பட்டு நீர் திறந்து விடப்படும்.

மாவிலாறு பிரதேசத்திலிருந்து அனைத்து புலிப் பயங்கரவாதிகளும் வெளியேற்றப்படும் போதுதான் எமது நடவடிக்கை நிறுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# காத்தான்குடியில் சகோதரர்கள் வெடிபொருட்களுடன் கைது!

கொழும்பு—

மட்டக்களப்பு - காத்தான்குடியில் வெடிபொருட்கள் வைத்திருந்ததாக சகோதரர்கள் இருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்தனர்.

ஆரையம்பதியில் மோகன்சுதர் நதீஸ் (வயது 19) மோகன்சுதர் பிரபாகாந்த் (வயது 24) ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 650 கிராம் வெடிபொருட்கள், சைக்கிள் போல்ஸ், வயர்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

# சென்.ஜோன்ஸ் மாணவரின் கோரிக்கையை இராணுவத்தினர் பரிசீலிக்க வேண்டும்!

## யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்—

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாகவுள்ள படையினரின் காவலரணை அகற்றி மாணவர்களின் சுதந்திரமான கற்றலுக்கு வழிசெய்ய வேண்டுமென மாணவர்கள் விடுத்த கோரிக்கையை படையினர் விரைவில் பரிசீலனை செய்ய வேண்டுமென யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

படையினரின் கெடுபிடிகள் மத்தியில் கற்றலைத் தொடர்ந்து வரும் குடாநாட்டு மாணவர்கள் ஆங்காங்கே படையினரின் அராஜகங்களுக்கு எதிராக கிளர்ந்தெழத் தொடங்கிவிட்ட நிலையில் படையினர் தமிழ் மாணவர்களின் கல்விக்கு இடையூறாக நடந்து கொள்வதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

மகளிர் பாடசாலைக்கு அருகில் படையினர் நிலைகொண்டு மாணவர்களின் ஆரோக்கியமான கல்விக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

பலமுறை அரசுக்கு நியாயம் கோரி கோரிக்கைகள் விடுத்தும் - அரசு கரிசனை கொள்ளாமல் நயவஞ்சகமாக தமிழ் மாணவர்களின் கல்வி மீது தனது நாசகார வேலைகளைத் தொடந்து வருகிறது.

குடாநாட்டிலுள்ள அனைத்து மாணவர்களும் கொதிப்படைந்துள்ள இந்த நிலையை சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பும் விளங்கிக் கொண்டு - குடாநாட்டுப் பாடசாலைகளை சுதந்திரமாக கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமென அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டால் -

# நுண்கலைக்கழகத்துக்கு 9 மாணவர்கள் அனுமதி!

யாழ்ப்பாணம்—


இராமநாதன் நுண்கலைக்கழகத்துக்கு அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களில் ஒன்பது பேருக்கு மனித உரிமை ஆணைக்குழுவினரின் தலையீட்டையடுத்து அனுமதி வழங்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்துக்கு மாணவர்களை தெரிவுசெய்வதில் முறைகேடுகள் இடம்பெற்றதாக மாணவர்கள் சிலர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் கடந்த வருடம் முறைப்பாடு செய்தனர்.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினரிடம் தொடர்புகொண்டு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் விடயத்தில் இடம்பெற்ற முறைகேடுகளைச் சுட்டிக்காட்டி குறித்த மாணவர்களை கழகத்துக்கு இணைத்துக் கொள்ளலாம் என சிபாரிசு செய்தனர்.

இதையடுத்து முறைப்பாடு செய்த மாணவர்கள் 9 பேருக்கு மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்தி நுண்கலைக்கழகத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# விடுதலைப் புலிகள் மீதான இந்தியத்தடை; சரியா என்பது விவாதத்துக்குரியது!



## தமிழக முதல்வர் கருணாநிதி

சென்னை—

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது சரியா என்பது விவாதத்துக்குரிய விடயம் என்று தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

தமிழக சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரம் முடிந்ததும் காங்கிரஸ் உறுப்பினர் ஞானசேகரன் ஒரு பிரச்சினையை எழுப்பினார்.

வேலூர் - திருப்புத்தூரில் கடந்த 1 ஆம் திகதி விடுதலைப் புலிகளை ஆதரித்துப் புரட்சிகர இளைஞர் முன்னணி என்ற அமைப்பு ஆர்பாட்டப்பேரணி நடத்தியது.

அந்த அமைப்பினர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக முழங்கங்களை எழுப்பியதோடு, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். அப்படி நீக்காவிட்டால் இந்தியா துண்டு, துண்டாகச் சிதறுண்டுபோகும் என அவர்கள் பேசியதாகக் கூறினார்.

விடுதலைப் புலிகள் மீதான தடை இருக்கும் நேரத்தில் இத்தகைய பேரணி மற்றும் ஆர்பாட்டத்துக்கு எப்படி அனுமதிக்கப்பட்டது என்றும், ம.தி.மு.க. நகர செயலாளர் உட்பட இதில் பலர் பங்கேற்றிருக்கிறார்கள். அவர்களுடைய செயல் அமைதிப் பூங்காவாக உள்ள தமிழகத்தில் மீண்டும் விசமத்தைத் தூவுவது போல இருக்கிறது.

எனவே, இதன் மீது அரசு உரிய நடவடிக்கை எடுத்து இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். இதன் மீது முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பாரா எனக் கேட்டார்.

இதற்குப் பதிலளித்து முதல்வர் கருணாநிதி கூறியதாவது -

புரட்சிகர இளைஞர் முன்னணி என்ற அமைப்பினர், ஈழமக்களைக் கொன்று குவிக்கும் சிங்கள இனவெறி அரசை கண்டித்து - அனந்தகிருஸ்ணன் என்பவர் தலைமையில் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கோரினர்.

அவர்கள் திருப்பத்தூர் பிரதான சாலையில் வராமல் நகரின் ஒதுக்குப் புறமான சாலைகளின் வழியாக ஊர்வலமாகச் சென்று ஆர்பாட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 150 பெண்கள் உட்பட சுமார் 400 பேர் அனந்தகிருஸ்ணன் தலைமையில் பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதில் இரு அமைப்பைத் தவிர மற்ற சில அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். இதன் விளைவாக அங்கு எந்த விதப் பதற்றமும் இல்லை. நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது என மாவட்ட அதிகாரிகள் எனக்குத் தகவல் அனுப்பியுள்ளனர். இந்த அளவோடு நம்முடைய அனுதாபத்தை, நம்முடைய மனோநிலையை ஈழத்தில் உள்ள சிங்களவருக்கும், இந்திய அரசுக்கும் சொல்லக் கூடிய அளவுக்கு அமைந்தால் அது ஏற்கத் தக்கதுதான். அவை எதிர்க்கத்தக்கவை என்று கொள்ளமுடியாது.


தமிழர்கள் பக்கத்திலேயே கொல்லப்படுவதை, சீரழிவதை நம்மால் தாங்கிக் கொள்ள இயலாது. அதற்குப் பரிகாரம் என்ன? வன்முறைக்கு வன்முறை பதிலாகாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கிளர்ச்சியில் ஈடுபடுவது அனுதாபத்தை வெளிப்படுத்துவதற்குத்தான். அதற்காகத்தான் இந்தப் பேரணி. ஆனால், நிலைமை வேறு மாதிரி திரும்பினால் இந்த அரசு வேடிக்கை பார்க்காது.

இந்திய இறையாண்மைக்கும், ஒற்றுமைக்கும் விரோதமாக யார் செயற்பட்டாலும் அரசு சும்மா விடாது.

விடுதலைப் புலிகளுக்கு இங்கு தடை விதிக்கப்பட்டது. தடை சரியா, அல்லவா என்பது விவாதத்துக்குரியது. தடை உள்ளவரை அதற்கு அடங்கித்தான் செயற்பட வேண்டும். அதை மீறினால் ஏற்படும் விளைவுகளை ஏற்கத்தான் வேண்டும் என கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

## ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமயவே அரசை யுத்தத்துக்கு தள்ளியுள்ளன

### என்கிறார் ரவூப் ஹக்கீம்



கொழும்பு—

சிங்களப் பேரினவாத கட்சிகளான ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவைதான் அரசாங்கத்தை யுத்தத்துக்கு தள்ளியுள்ளன என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து ரவூப் ஹக்கீம் கூறியுள்ளதாவது -

மூதூர், மாவிலாறு நிலைமைகள் வடக்கு - கிழக்கு முழுவதுமாகப் பரவி - முஸ்லிம்களுக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தும் நிலைமை உருவாகியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் - அரசாங்கமும் குறுகிய இராணுவ நலன்களுக்கான யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. ஜே.வி.பி - ஜாதிக ஹெல உறுமய ஆகியவைதான் அரசாங்கத்தை யுத்தத்துக்கு தள்ளியுள்ளன எனத் தெரிவித்தார்.

இதனிடையே கொழும்பிலுள்ள அனைத்து அரபு நாடுகளின் தூதுவர்களையும் சந்தித்த ஹக்கீம், யுத்த நிறுத்தத்தை இருதரப்புக்கும் ஏற்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

## ரம்புக்வெல, சமரசிங்க மீது ஐ.தே.க. ஒழுங்கு நடவடிக்கை

கொழும்பு —

அரசாங்கப் பக்கம் தாவி அமைச்சர்களாகவுள்ள கெகலிய ரம்புக்வெல, மகிந்த சமரசிங்க ஆகியோர் மீதான ஒழுங்கு நடவடிக்கை குறித்த அறிக்கை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கையளிக்கப்படவுள்ளது.

இருவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளதாக அந்தக் கட்சி யின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாய க்க தெரிவித்தார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் அரசாங்கத்தில் இணைந்துள்ள மற்ற உறுப்பினர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளை ஏற்கவில்லை எனின் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக வேண்டும். தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குத் துரோகம் செய்யக்கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைப் பொலிஸாருக்குப் பயிற்சி; கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்!

சென்னை —

இந்தியாவில் இலங்கைப் பொலிஸாருக்குப் பயிற்சி அளிக்கும் மத்திய அரசின் செயலைக் கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இலங்கையில் தமிழர்களைக் கொன்று குவிக்கும் கொடுமை தொடர்ந்து நடைபெற்றுவரும் இந்தச் சூழ்நிலையில், இந்தியாவில் சிங்களப் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் மத்திய அரசைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் நேற்று முன்தினம் சென்னை மெமோரியல் அரங்கம் அருகில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்துக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் செ.பொன்னிவளவன் தலைமை தாங்கினார். அம்பேத் வளவன் முன்னிலை வகித்தார். மாநில துணைப் பொதுச் செயலாளர்கள் சூ.க.விடுதலைச் செழியன், சு.திருமாவளவன் உட்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்திய அரசு இந்தியாவில் சிங்களப் பொலிஸாருக்குப் பயிற்சி அளித்து வருவதைக் கண்டித்தனர், இதில் மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுத்துச் சிங்களப் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்து வருவதை உடனே தடுத்து நிறுத்த வேண்டும்.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் பயிற்சி அளிக்கக்கூடாது என்பதை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளர் திருமாறன் பேசியதாவது -

சிங்கள பொலிஸ் அதிகாரிகளுக்குத் தமிழகத்தில் பயிற்சி அளிப்பதன் மூலம் தமிழ் நாட்டில் தி.மு.க. அரசை கவிழ்க்க மத்திய அரசு சதி செய்து வருகிறது. இது தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் சிங்கள அரசுக்குத் தமிழகத்தில் பயிற்சி அளித்து வருவதற்குச் சட்டசபையில் கண்டனம் தெரிவித்தார். இது வரவேற்கத்தக்கதாகும்.

மேலும் இந்தியாவில் எந்த இடத்திலும் சிங்களப் பொலிஸ் அதிகாரிகளுக்கு மத்திய அரசு பயிற்சி அளிக்க அனுமதிக்கக் கூடாது. அதனை மத்திய அரசு மீறும் பட்சத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்தவுடன், இது பற்றி முடிவு எடுத்து தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மத்திய அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது பற்றி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட் டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி யைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும்

### இல.கணேசன் தெரிவிப்பு



காஞ்சிபுரம் —

இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு சுமூக தீர்வுகாண வேண்டும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் இல.கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டால் இருதரப்பும் சுமூக முடிவு எட்ட முடியும் என்ற நம்பிக்கை வைத்துள்ள நிலையில் மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட வேண்டும் என்பது என் கருத்தாகும்.

இந்தப் பிரச்சினையால் ஆரம்பத்திலிருந்தே தமிழகத்துக்கு இலங்கை அகதிகள் அவ்வப்போது வருவதும், பின்பு தாய்நாடு திரும்புவதும் தொடர்கதை ஆகிவிட்டது. இது தடுக்கப்பட்ட வேண்டும்.

முன்பு இரு தரப்பினருக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் வெறும் ஏட்டளவில்தான் உள்ளது. அவை சரியாக அமுல்படுத்தப்படவில்லை. அங்கு இலங்கை அரசு என்பதற்குப் பதிலாகச் சிங்கள அரசுதான் நடக்கிறதோ என்ற சந்தேகம் உருவாகியுள்ளது.

இந்த நிலையில் தமிழக பாரதீய ஜனதா கட்சி - அகில இந்திய பா.ஜனதா கட்சி தலைமையிடம் இலங்கைப் பிரச்சினை விடயத்தில் இந்திய அரசாங்கம் தலையிட வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவுள்ளது. ஏனென்றால், ஒரு மாநில அளவிலான கட்சி அமைப்பு, வெளியுறவுக் கொள்கை விடயத்தில் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது எனத் தெரிவித்தார்.

## இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக கருணாநிதி குரல் கொடுக்காதது ஏன்?



### வைகோ கேள்வி

ஈரோடு —

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக கருணாநிதி குரல் கொடுக்காதது ஏன் என்று ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

எந்தப் பிரச்சினைகள் வந்தாலும், மொழி, இனஉணர்வுக்காக பாடுபடுவோம். பலஸ்தீனம், லெபனான் நாட்டு போராட்டங்களைப் பாராட்டி பலர் பேசுகின்றனர்.

ஆனால், ஈழத்தமிழர்கள் போராட்டத்தைப் பற்றி யாரும் பேசுவதில்லை. ஈழத்தமிழர்கள் தனிநாடு கேட்டுப் போராடுவது அவர்களின் உரிமை. இந்தியாவுக்கும், இலங்கைக்கும் ஏற்பட இருந்த இராணுவ ஒப்பந்தத்தைக் கைவிடக் கோரி பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கூறினேன். அதை அவர் ஏற்றுக்கொண்டு அந்த ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

மத்தியில் 13 அமைச்சர்களை கொண்டுள்ள தமிழக முதலமைச்சர் கருணாநிதி இலங்கை தமிழர்களுக்காக ஒருமுறையாவது குரல் கொடுத்து இருப்பாரா?

இலங்கைத் தமிழர்களுக்கு திராவிட கட்சி செய்ய வேண்டியதை ம.தி.மு.க செய்து கொண்டு இருக்கிறது. ஈழத்தமிழர்கள் பிரச்சினை பற்றிப் பேசுவோம். ஆனால், வன்முறையில் ஈடுபடமாட்டோம்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக முதலமைச்சர் கருணாநிதியை சந்திக்க இலங்கை தமிழ் எம்.பி.க்களுக்கு வாய்ப்பு கொடுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழகத்துக்கு மேலும் 126 அகதிகள்

ராமநாதபுரம்—

இலங்கையிலிருந்து தனுஷ்கோடி அரிச்சல்முனைப் பகுதிக்கு 35 குடும்பங்களைச் சேர்ந்த 126 அகதிகள் கடந்த திங்கட்கிழமை வந்தனர்.

வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த 41 ஆண்கள், 46 பெண்கள், 18 ஆண் குழந்தைகள், 21 பெண் குழந்தைகள் உட்பட 126 பேர் இராமேஸ்வரம் அருகே தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதிக்கு வந்தனர்.

பேசாலைக் கடற்கரையிலிருந்து 9 படகுகள் மூலமாக இவர்கள் தனுஷ்கோடி அரிச்சல்முனைப் பகுதிக்குச் சென்றதாகத் தெரியவருகிறது.

# தனியார் கல்விநிலைய உரிமையாளர் கடத்தலுடன் தொடர்பில்லையாம்!

## படைத்தரப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

கச்சாய் பகுதியில் கடத்தப்பட்ட தனியார் கல்வி நிறுவன உரிமையாளருக்கும், தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் படை அதிகாரி தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் கச்சாய் பகுதியில் தனியார் கல்வி நிலைய உரிமையாளரான கெற்பலி மேற்கைச் சேர்ந்த சிதம்பரநடராசா சுரேஸ் (வயது 30) என்பவர் சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள அவரது தனியார் கல்வி நிலையத்திலிருந்து வீடு செல்லும்போது கச்சாய் அம்மன் கோவிலடி பகுதியில் வைத்து பவள் கவச வாகனத்தில் வந்த படையினர் ஏற்றிச் சென்றுள்ளனர்.

அவர் சென்ற மோட்டார் சைக்கிளை கவச வாகனத்துக்குப் பின்னால் படையினர் ஓட்டிச் சென்றதாகவும், இந்தச் சம்பவத்தை கொடிகாமம் நகரப் பகுதியில் பொதுமக்கள் சிலர் கண்டதாகவும் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகவே மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் படை உயர் மட்டத்தினரிடம் தொடர்புகொண்டபோது - குறித்த கல்வி நிலைய உரிமையாளரை தாம் கடத்தவில்லையென தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மனித உரிமை ஆணைக்குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்வியியற்கல்லூரி டிப்ளோமாதாரிகள் 12 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் —

கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகள் 12 பேருக்கான நேர்முகப் பரீட்சை நாளை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட 12 டிப்ளோமாதாரிகளையும் நேர்முகப் பரீட்சைக்கான ஆவணங்களுடன் வருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு -

ஆர்.யாழினி (ஆரம்பக்கல்வி), எஸ்.செல்வக்குமாரி (ஆரம்பக் கல்வி), க.கலையழகன் (விஞ்ஞானம்), சி.மோகனதாஸ் (கணிதம்), ந.விநோதினி (ஆங்கிலம்), க.திரவியகுமார் (நூலக விஞ்ஞானம்) -

எஸ்.சர்வேஸ்வரன் (கணிதம்), எஸ்.ஜெயரூபி - மட்டக்களப்பு, எஸ்.ஸ்ரீதரன் - மட்டக்களப்பு, பி.சுபாஜினி -மட்டக்களப்பு, ரி.மயூரா - மட்டக்களப்பு, பா.நிதர்சினி - நூலக விஞ்ஞானம்)

# ஆர்ப்பாட்டத்தை கலைக்கவந்த படையினர் மூன்று சைக்கிள்களை எடுத்துச் சென்றனர்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மாணவர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

சைக்கிள்கள் உட்பட தமது உடமைகளை படையினர் எடுத்துச் சென்றதாக, சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாணவர்களின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நேற்றுக் கல்லூரிக்கு அருகில் உள்ள இராணுவக் காவலரணை அகற்றக்கோரிய ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க வந்த படையினர் சைக்கிள்கள், பதிவுப் புத்தகம் உட்பட உடமைகளை எடுத்துச் சென்றனர்.

படையினர் எடுத்துச்சென்ற உடமைகளை மீளப்பெற்றுத்தருமாறு முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஆணைக் குழுவினர் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தொடர்புகொண்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஞானசம்பந்தர் கலைமன்ற 44 வது ஆண்டு விழா

புலோலி —

புலோலி - ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் 44 ஆவது ஆண்டுவிழா இன்று மன்றத்தின் தலைவர் திருமதி.இ.யோகரஞ்சிதம் தலைமையில் புலோலி கிழக்கில் அமைந்துள்ள ஞானசம்பந்தர் கலை மன்றத்திலுள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு சமய ஆராதனை நிகழ்வும் - மாலை 2 மணி தொடக்கம் 6 மணிவரை கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

கலை நிகழ்வுகளாக பாலர் கதம்பம், புல்லாங்குழல் இசை, பாட்டு, பேச்சு, நடனம் என்பவற்றுடன் ஆசிரியர் பா.இரகுவரன் நெறியாழ்கை செய்த ஹாட்லிக் கல்லூரி மாணவர்களின் முற்றத்து வேம்பு நாடகமும் நடைபெறவுள்ளது. (12)

# உதைபந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம் —

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட இறுதி ஆட்டம் இன்று மாலை 4 மணிக்கு ஆனைக்கோட்டை யூனியன் ஏ அணிக்கும் - ஆனைக்கோட்டை யூனியன் பி அணிக்கும் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டுப்போட்டிக்கு யாழ்.உதைபந்தாட்ட மத்திய சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.

# கோப்பாய் கோட்ட தமிழ்த்தினப் போட்டி

யாழ்ப்பாணம் —

கோப்பாய் கல்விக்கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான தமிழ்த்தினப் போட்டி இன்றும், நாளையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் காலை 9 மணிமுதல் நடைபெறும்.

இன்று நடைபெறவுள்ள போட்டிகளின்போது கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களும், நாளை நடைபெறவுள்ள போட்டியின்போது இசை, நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களும் தவறாது சமூகமளிக்குமாறு கோப்பாய் கல்விக்கோட்ட அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் போட்டிகளில் வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கான இறுதிப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (90)

# குமுதினி படகுச்சேவை திங்கள் முதல் ஆரம்பம்

நெடுந்தீவு —

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான பயணிகள் சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகு திருத்த வேலையின் பின்னர் மீண்டும் கடந்த திங்கள்முதல் சேவையில் ஈடுபட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கும் இந்தப்படகு கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக திருத்த வேலை காரணமாக சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டிருந்தது.

நெடுந்தீவு துறைமுகப் பகுதி ஆழமாக்கப்படாமையால் - துறைமுகம் தற்போதைய கடும் காற்றால், நீர் மட்டம் குறைந்துள்ளதால் படகுகளின் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக படகுச் சேவையில் தாமதம் ஏற்படுவதுடன், குமுதினிப் படகு மற்றும் அம்புலன்ஸ் படகு என்பன சேவையில் ஈடுபடமுடியாத நிலையும் ஏற்பட்டுவருகிறது.

இந்த நிலையைக் கருத்திற் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும், அரச அதிகாரிகளும் விரைந்து துறைமுகப்பகுதியை ஆழமாக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (113)

# கூட்டம்

தொண்டமானாறு —

செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் உற்சவ அங்கத்தவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (12)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம் —

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கான வலய மட்ட விளையாட்டு விழாவுக்கான தெரிவுப் போட்டிகள் நாளை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டியில் பங்குபற்றும் முன்பள்ளிகள் குறித்த நேரத்துக்குச் சமூகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது (29)

# மட்டுவில் கலைமகள் முன்பள்ளி விளையாட்டு விழா

சாவகச்சேரி —

சாவகச்சேரி நகரசபையின் நிர்வாகத்திலுள்ள மட்டுவில் தெற்கு கலைமகள் முன்பள்ளி மாணவர்களின் மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய அதிபர் க.துரைரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

நகரசபை செயலாளர் ஆ.குணமணிதேவி, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பாக்கியராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், கிராம அலுவலர்களான வை.துரைசிங்கம், க.வாமதேவன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (29)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 10 05 1912

இறைவன் அடியில் 11 07 2006



அமரர் செல்லம்மா துரையப்பா அவர்கள் (கொட்டடி)

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் கொட்டடி ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் தற்பொழுது வெள்ளவத்தை, தெகிவளையில் வசித்தவருமாகிய காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் கணபதிப்பிள்ளை துரையப்பாவின் அருமை மனைவியான அமரர் திருமதி செல்லம்மா துரையப்பா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 09.08.2006 அன்று முகத்துவாரத்திலும் சபிண்டிகரண கிரியைகள் 10.08.2006 அன்று இல A 1/3,அரசாங்க மாடிகள், ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெகிவளையில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் தாங்கள் குடும்ப சகிதம் கலந்து கொண்டு எங்கள் இதயத்தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் இணைந்து, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

மேலும் அவரது மரணச் செய்தியறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவருக்கும் மலர்வளையம் அனுப்பியவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
இல A 1/3, அரசாங்க மாடிகள்,
ஆஸ்பத்திரி வீதி, களுபோவில,
தெகிவளை.

தகவல்:
பூலோகராஜா சசிதரன் (பேரன்)
(ராசி சில்க்ஸ், நல்லி சில்க்ஸ் உரிமையாளர்)
யாழ்ப்பாணம்.

T.P: 0112 719941
0112 360180



DAIDO



CF 90C
4 Gear இன் சிறப்புகள்
எங்களிடம் தாராளமாக DAIDO, YAMATO, HONDA, YAMAHA, BAJAJ, SUZUKI மற்றும் எல்லா சீனா தயாரிப்புகளுக்குப் பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டியளவு கிடைக்கும்

Koyo
ரேசர்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO



ஏகமுகவர்
செரன்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிரைவேட்) லிமிட்டட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2541560-1, 2436770,
பக்ஸ் 011-2454608
E.mail: zme@slt.lk



GIT கருத்தரங்கு

A/L 2007 மாணவர்களே!

நல்லூர் லயன்ஸ் கழக ஆதரவில் IBMS நடாத்தும்

இலவச கருத்தரங்கு

இடம் : IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna
காலம் : 09.08.2006 புதன்கிழமை
08.30 மணி முதல் 03.30 மணி வரை

A/L மாணவர்கள் அனைவரும் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

மேலதிக விபரங்களுக்கு :

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
# 209, Manipay Road, Jaffna. T.P NO : 021 222 8232

ஊடக அனுசரணை: நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஐரோப்பிய ஒன்றியத் தடையின் எதிர்விளைவை அனுபவிக்கிறோம்

## கண்காணிப்புக்குழு தலைவர் தெரிவிப்பு

கொழும்பு—

பின் விளைவுகள் குறித்துச் சிந்திக்காமல் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையின் விளைவை இப்போது அனைவரும் அனுபவித்து வருவதாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

போர்நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் குறித்து இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் ஒப்பீடுகள் அடிப்படையில் தவறானவை.

சிறுவர்களைப் படையணிகளில் விடுதலைப் புலிகள் இணைத்துக் கொள்வதாகத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளையும், அரசாங்கத்தால் நிகழ்த்தப்படும் வான்வழித் தாக்குதல்களையும் ஒப்பிட முடியாது.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் போர்நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கின்றபோதும், அவை மிகவும் பாரதூரமானவை.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கு முன்னர், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை எடுத்து விளக்கிய போதும், இந்த விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் அலட்சியப் போக்கைக் கைக்கொண்டது.



பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையின் எதிர்விளைவைத் தற்போது அனைவரும் அனுபவித்து வருவதாகவும் உல்ப் ஹென்றிக்சன் மேலும் தெரிவித்தார்.

# பௌயரைச் சந்திப்பதை தட்டிக்கழித்தார் மகிந்த!

கொழும்பு—

நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயரைச் சந்திப்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தட்டிக்கழித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு திரும்பியதும் - புலிகளுடனான பேச்சு விபரங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எடுத்துக் கூறுவதற்கு பௌயர் திட்டமிட்டிருந்தார்.

இதற்கேற்ப இவரது பயணத் திட்டம் தயாரிக்கப்பட்ட போதும் - நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை - பௌயர் சந்திக்க முடியவில்லை. ஜனாதிபதி மகிந்தவே பௌயரைச் சந்திக்க நேரம் ஒதுக்கிக் கொடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பௌயரை அமைச்சர் ஒருவரும், சமாதானச் செயலகப் பணிப்பாளருமே சந்தித்து கிளிநொச்சி சந்திப்பு தொடர்பாகக் கேட்டறிந்ததாகத் தெரியவருகிறது.

## ஊர்காவலர்...

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த சுபைர் என்ற ஊர்காவற் படைச் சிப்பாயே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

## கிளைமோர்...

சாஸ்திரவெளி அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த இரு அதிரடிப் படையினரும் உயிரிழந்தனர்.

சார்ஜன்ட் சுமதிதாஸ, கொன்ஸ்டபிள் பண்டார ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

## மொரவெவ...

மீது துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தசம்பவத்தில், விமானப் படைச் சிப்பாய் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதுடன்- சிவிலியன் ஒருவரும், விமானப்படையினர் இருவரும் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அணையத் திறந்த...

கிடைக் கவில்லை.

இதேவேளை - மாவிலாறு நீரை திறந்து விட்ட 10 நிமிடங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படுமென அரச பாதுகாப்புப் பேச்சாளர் அமைச்சர் கெகலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தபோதிலும், தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (04)

# பிரதி பொலிஸ்மா அதிபராக உபுலுக்குப் பதவி உயர்வு!

கொழும்பு—

கண்டி - திகணவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட விசேட அதிரடிப்படையின் பயிற்சிப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனிவிரட்ண - பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

1982 ஆம் ஆண்டு சப்இன்ஸ்பெக்டராக பொலிஸில் இருந்து 1984 ஆம் ஆண்டு விசேட அதிரடிப்படையில் இருந்த இவர் - கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

இவரது இறுதிச் சடங்கு நாளை திகணவில் நடைபெறும்.

இதேவேளை - இந்தச் சம்பவம் தொடர்பாக ஆறு பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கருணாகுழு அலுவலகம் இன்று கொழும்பில் திறப்பு

கொழும்பு—

கருணாகுழுவின் அலுவலகம் ஒன்று இன்று கொழும்பில் திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் கட்சி என்ற பெயரில் இயங்கும் கருணாகுழு - மட்டக்களப்பில் ஏற்கனவே அலுவலகம் ஒன்றைத் திறந்துவைத்துள்ளது.

அதேவேளை - இன்று காலை கொள்ளுப்பிட்டி, ஸ்கோப் லேனில் கருணாகுழுவின் கொழும்பு அலுவலகம் திறந்துவைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மனிதாபிமான...

முயற்சி நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று மாலை 5 மணியளவில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மற்றும் பொதுமக்கள் அமைப்புப் பிரதிநிதிகள் அணைக்கட்டுப் பிரதேசத்துக்குச் சென்றனர்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான சுதாகர் அணைக் கதவைத் திறந்து வைத்தார்.

## அணையை...

செய்றபட்டோம். இது வெற்றியளித்துள்ளது. நீர் பாய்கிறது. அதை விட அந்தப்பகுதியை எமது கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்தது.

தண்ணீர் திறந்து விட்டதால் தாக்குதல் நடவடிக்கை நிறுத்தப்படலாம். தண்ணீரை தடுக்கும் நடவடிக்கை நடக்காதவரை இது தொடரும். தண்ணீரை ஒரு உத்தியாகப் பயன்படுத்தக்கூடாது என்றும் முன்பு கூறியுள்ளோம்.

இதை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக விடுதலைப்புலிகள் பார்த்தால் கடந்த 2 ஆம் திகதியே தண்ணீரைத் திறந்திருக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

# கோண்டாவில் கிழக்கில் இளைஞர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்—

கோண்டாவில் கிழக்கு - ரயில் நிலைய வீதியில் சிவபூமி மனவிருத்தி பாடசாலைக்கு முன்பாக இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 8.20 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஊரெழு மேற்கைச் சேர்ந்த சதாசிவம் கஜரூபன் (வயது -26) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

குறித்த நபர் நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஊரெழுப் பிள்ளையார் கோவிலடியிலுள்ள தனது வீட்டிலிருந்து - மோட்டார் சைக்கிளில் அவரது மாமனார் வீட்டுக்குச் சென்றுவிட்டு அங்கிருந்து யாழ். கன்னாதிட்டியிலுள்ள நகைக் கடைக்கு வேலைக்காக சென்று கொண்டிருந்த போதே - அவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவரைச் சுட்டுச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்துக்கு சென்ற யாழ். மேலதிக நீதவான் சிறிநிதி நந்தசேகரன் மரண விசாரணைகளை மேற்கொண்டபின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்படி கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலம் கோப்பாய் பொலிஸாரால் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் உறவினரிடம் கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (82)

## அரியாலையில் வர்த்தகர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்—

அரியாலை - புங்கங்குளம் பகுதியில் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுமாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் கொழும்புத்துறை வீதி - அரியாலையைச் சேர்ந்த இரட்ணவேல் அகிலன் (வயது 28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

குறித்த நபர் மாம்பழம் சந்திப்பகுதியிலுள்ள தனது வர்த்தக நிலையத்தை மூடிவிட்டுவரும்போது இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## பதவியாவில் சிப்பாய் காயம்!

கொழும்பு—

அனுராதபுரம் - பதவியா பகுதியில் வீதி ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினருக்கு உணவு எடுத்துச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

நேற்றுக் காலை 7.10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இராணுவச் சிப்பாய் பதவியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தையடுத்து சம்பவம் நடந்த பிரதேசத்தைச் சுற்றிவளைத்து படையினர் தேடுதல் நடத்தினர்.

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

திருகோணமலை—

திருகோணமலை - தம்பலகாமம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - முள்ளிப் பொத்தானை சிங்கள வித்தியாலயத்துக்குப் பின்புறமாக வசிக்கும் மரியதாஸ் (வயது 44) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

தம்பலகாமம்-முள்ளிப்பொத்தானை பகுதியில் இந்தச்சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவ அழுத்தம்...

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரும் மாவிலாறு அணைக்கட்டுக்குச் சென்றபோது- படையினர் தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டதில் அந்த முயற்சி இடைநடுவில் கைவிடப்பட்டது.

நேற்று மாலை 5 மணியளவில் நாங்கள் அந்த அணையைத் திறந்தோம்.

இராணுவ அழுத்தம் காரணமாக இது திறக்கப்பட்டது என்று சொல்ல முடியாது. இந்தத் தாக்குதலுக்காக படையினர் பல தடவைகள் பல முனைகளில் முயற்சிகள் எடுத்தனர்.

ஆனால், அந்த முயற்சிகள் எல்லாம் எங்களால் முறியடிக்கப்பட்டன. எனவே, நாங்கள் இதை மனிதாபிமான அடிப்படையில் செய்யவேண்டும் என்பதற்காக இந்த அணையைத் திறந்து விட்டோம்.

படையினர் ஒரு பேச்சுவார்த்தை ஊடாகவோ அல்லது இதற்கு ஒரு மாற்று நடவடிக்கை எடுப்பது பற்றிச் சிந்திக்காமல் இராணுவ நடவடிக்கை மூலம் அதைச்செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

அவர்கள் அந்த இலக்கை எட்ட முடியாத பட்சத்தில் தொடர்ந்து நீண்டு கொண்டு போவதன் காரணமாக மனிதாபிமான அடிப்படையில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டோம்.

மாவிலாறு பற்றி எமது மக்கள் முன் வைத்த கோரிக்கைகள் வெளியில் கொண்டு வருவதற்கு இந்த நடவடிக்கை காரணமாக அமைந்தது. அத்துடன், அவர்களுடைய தொடர்ச்சியான பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்ற ஒரே விடயத்தில்- மற்றவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற அடிப்படையில்- இந்த அணை திறந்து விடப்பட்டிருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பம்பலப்பிட்டி குண்டு...

சங்கரப்பிள்ளை சிவதாசன்- நேற்றுப் பிற்பகல் 2.50 மணியளவில் தனது அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வான் ஒன்றில் சென்று கொண்டிருந்த போது டிக்மன் வீதியில் பாரிய குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

இந்தக் குண்டு வெடிப்பையடுத்து வான் தீப்பிடித்து எரிந்து முற்றாக கருகி நாசமானது. வானின் முன் ஆசனத்திலிருந்த சிவதாசன் குண்டு வெடிப்பின்போது தூக்கி வீசப்பட்டதால் பலத்த எரிகாயங்களுடன் உயிர் தப்பினார்.

இவருடன் பயணித்த மெய்க்காவலரான அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் சேனாதீர அந்த இடத்திலேயே பலியானார்.

அத்துடன், மற்றொரு மெய்க்காவல பொலிஸ் கொன்ஸ்டபிள் சந்திரசிறி மற்றும் சாரதி சுரேஸ் ஆகியோரும் - வீதியால் சென்று கொண்டிருந்த மேலும் 5 பேரும் படுகாயமடைந்தனர்.

இதேவேளை சம்பவம் இடம் பெற்ற இடத்தில் பஸ்ஸுக்காக தனது பேரனுடன் காத்திருந்த 3 வயதுப் பெண்குழந்தையொன்றும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தது.

சிவதாசன் பயணித்த வானின் பின்புறத்தில் பொருத்தப்பட்டிருந்த சக்தி வாய்ந்த பிளாஸ்ரிக் காந்தக் குண்டே வெடித்திருக்கலாமென பொலிஸார் கருத்துத் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த சிவதாசன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் - அவரது உடல் நிலை தேறி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குண்டு வெடித்த வான் கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த நசீர் என்பவருடையதென்றும் - இந்த வான் சிவதாசனால் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் அரசாங்கத்துக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே காரணமென்று ஈ.பி.டி.பி. குற்றஞ்சாட்டியிருக்கும் அதேவேளை - ஈ.பி.டி.பி. கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உள் முரண்பாடு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
கணனித் துறையில் துறைசார் வல்லுனராக AIMS உடன் இணையுங்கள்
GNU/Linux Administration & Networking
Oracle 9i
SQL Server
VB.NET (With Project)
C#.NET (With Project)
ASP.NET (With Project)
Java (With Project)
HTML/XML
PHP/MySQL/Apache
Hardware Engineering
Network Engineering
ஆரம்பம் 12.08.06
AIMS Your Training Partner
முற்றிலும் மாறுபட்ட Real Practical Environment
#118, Palaly Road, Thirunelvely, Jaffna. (Near Postbox Junction)
Center for FOSS & LAMP

Fast Track @ AIMS
1. Microsoft Office-2003
• Introduction to Windows Xp
• Word • Excel
• Access • Assignment
• Power Point Presentation
2. Computer Hardware
• Introduction to Hardware
• Identification of Parts
• Assembling & Installation
• Setup & Configuration
• O/S & Software Instalautation
• Trouble shooting Techniques
3. Graphic Designing & Publishing
• Introduction to DTP
• PageMaker • Photoshop
• CorelDraw & publishing Techniques
• Project work
4. Internet Technology
• Introduction to Network
• Introduction to Internet
• Web Server
• E-Mail
ஆரம்பம்: 12.08.06 9.00 மணி
Just 1500/- only
AIMS Your Training Partner
#118, Palaly Road, Thirunelvely, Jaffna.
Center for FOSS & LAMP

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.08.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.